
சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 7	இதழ்: 01	ஜூன் - 2025	விலை - ரூ.20/-
VOL:7	ISSUE: 01	June - 2025	Rs. 20/-



சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.850/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அரிய

பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-6 மலர்-12 மே-2025

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குழந்தையேஃஃஃ

நீ எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க பழகி கொள்ள வேண்டும். எதற்காகவும் கவலைப்படாதே. எதுவும் இல்லை என்றோ, என்ன நடக்குமோ, என்ன பேசுவார்களோ, என்னிடம் எதுவும் இல்லையே என்று எதிர் மறையாக பேசுவதையும், சிந்திப்பதையும் இன்றோடு விட்டு விடு.

எனது கண்மணிகள் ஒருநாளும் கலங்கக் கூடாது. அப்பா நான் இருக்கிறேன் எதற்காக கவலைப்படுகிறாய். எதற்கும் அஞ்சாதே! எதுவும் நடக்காது. தவறாக நடக்கும் எவரையும் உன்னிடம் நெருங்க விடமாட்டேன். எவரும் உன்னை தவறாக பேசக்கூட விடமாட்டேன்.

இருப்பதை வைத்து சிந்தித்து வாழ கற்றுக் கொள். அனைவரையும் அனுசரித்து போ அதில் ஒன்றும் தவறில்லை. அவசரப் படாமல் இரு. அனைத்தும் உன்னை தேடி வரும் காலம் விரைவில் வரும். எதிரிகள் ஒடி ஒழிந்து விடுவார்கள். விரைவில் வாழ்க்கையில் மாறுதல்கள் ஏற்பட்டு எனது வருகைக்காக காத்திருப்பாய். கவலைப்படாதே நான் இருக்கிறேன்.

இன்றைக்கு என்ன உணர்வில் இருக்கிறா யோ, அதே உணர்வில் என்றும் இருக்கப் பழகு. எந்தவித முயற்சியும் இல்லாமல் உன்னை கரை சேர்த்து விடுகிறேன். என்னிடம் திடமான நம்பிக்கை வைத்தாலே போதும். எல்லாம் தானே கிடைக்கும் என்பதில் நம்பிக்கை கொள். எல்லா விளைவுகளுக்கும் ஒரு காரணம் உண்டு. அந்தக் காரணம் உனக்கு நன்மை தருவதற்கே ஏற்பட்டது என நம்பு. அனைத்தும் நல்லதற்கே.

- பகவான் ஸ்ரீ சீரடி சாய்பாபா

ஆசிரியர் பக்கம்...



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் பேரருளால் என்பத்தி மூன்றாவது இதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். சென்ற இதழின் வெளியீட்டு விழா, 04.05.2025 ஞாயிற்றுக் கிழமை காலை பத்து மணிக்கு, சென்னை அயனாவரம், 2/15, போலீஸ் மாணிக்கம் தெரு, இராமலிங்கசுவாமி சத்ய சன்மார்க்க சங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவின் முதல் நிகழ்ச்சியாக, நமது ஆசிரியர் அவர்கள் இயற்றிய ஆத்மஞான பாடலை, செல்வி. அமிர்தா, அட்சயா ஆகியோர் பாடினர். நிகழ்ச்சியை திரு. பிரபு தொகுத்து வழங்கினார். இம்மாத இதழை கோயம்பேடு மஞ்சு அசோசியேட் நிறுவனர் திரு. எல். காமராஜ் அவர்கள் வெளியிட, மணலி பாபா பக்தர் திரு. செல்வ விநாயகம் அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்.

திரு. கோபால் சாய், திருமதி. மாதங்கி பாலாஜி, திரு. நாராயணன், திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார், திருமதி. தனம் அகஸ்டின், ஆகியோர் தங்களது அனுபவங்களை பக்தர்களுடன்





பகிர்ந்து கொண்டனர். திரு. அகஸ்டின் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறி நிறைவு செய்தார். ஆத்மஞானியரின் அன்னதான குழுவினர் வந்திருந்த அனைவருக்கும் அறுசுவை உணவளித்து மகிழ்ந்தனர்.

எல்லா செயலுக்கும் ஒரு உள்நோக்கம் இருக்கிறது. அது சுயநலமாக இல்லாத போது மட்டுமே அது சேவையாகிறது! பாபாவின் அருள் வேண்டும் என்பதற்காகத் தான் சேவை செய்கிறேன் என்று நினைப்பது கூட வேலை தானே தவிர சேவை அல்ல! பொருள் தேவையோ, அருள் தேவையோ இரண்டையுமே எதிர்பார்ப்பது கூட சுயநலமே! சுயநலமற்ற செயலே சேவை!

அந்தச் செயல் செயலாக கருதப்படுவதில்லை! அந்தச் செயலுக்கு கர்மாவும் இல்லை! அப்படிச் செய்கிற ஞானிகள் அந்தச் செயல் பற்றி நம்மிடம் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை! அப்படித் தான் உலகையே புனிதமாய் மாற்றி அமைக்கிற பகவான் பாபாவின் திருச்செயல் யாவும் மிக மிக ரகசியமாக கையாளப்படுகிறது!



இறைவன் மீது உண்மையான தாபம் வந்துவிட்டால், தாபம் வந்தவர்கள் மௌனமாக அமர்ந்து தியானமே செய்வர்! அப்போது உலக வாழ்க்கை ஈடுபாடு என்பது கழன்றே போகிறது! ஆனால் அப்படியா நாம் இருக்கிறோம்? நமக்கு உண்மையான தாபம் இறைவன் மீது இல்லை! நாம் பிளாஸ்டிக் ரோஜாவாக இருக்கிறோம்! ஆகவே தான் மணம் இல்லை! வெளிப் பார்வைக்கே நாம் ரோஜாப்பூக்கள்! நம்மைச் சுற்றி இருக்கிற முட்களை வைத்து நம்மை நாமே காயப்படுத்திக் கொண்டே இருக்கிறோம்!



உலகம் மீது தாபம் வந்தால் மனமும் உடலும் சதா சுழல ஆரம் பிக்கிறது! இறைவன் மீது தாபம் வந்தால் உலகச் சுழற்சி நமக்குள் நின்று, தியானத்தில் உடலும் மனமும் உறைந்து போகிறது! உடலையும் மனதையும் மறந்து ஆனந்த நிலையில் நிலைப்பதே தியான சமாதி! பக்தி என்பது நமக்கு வழி தான். அடைய வேண்டிய இலக்கு ஞானமே! ஞானம் அடையாதவரை முக்தி இல்லை!



முக்தி என்பது பிரார்த்தனை யால் வருவதில்லை பரிபக்குவத் தால் மட்டுமே வருகிறது! தியாகமே முக்திக் கதவை திறக்கிறது! நமக்கு நம்மைக் கூட அல்ல நம் உறவுகளைக் கூட வெறும் மனதள வில் கூட தியாகம் செய்ய முடிவ தில்லை! எனவே மனம் மாறுவதே நமக்கான சாயி மார்க்கம்! என்பதை உணர்ந்து தவத்தின் மூலம் பகவான் சாயிநாதரின் பாத கமலங்களை அடைவோம்.

பகவான் சாயிநாதரின் பேரரு ளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று உலக மாந்தர்கள் அனைவரும் இயற்கை பேரிடர், போர், பகை அச்சமின்றி ஆரோக்கியத்துடனும், மன நிம்மதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

அன்புடன் ஆசிரியர்

அன்பிற்கினிய சாய் சொந்தங்களே...!

நமது சாய் மகராஜ் குருவைத் தேடி ஆன்மீக மாத இதழுக்கு கடந்த ஏழு ஆண்டுகளாக எவ்வளவோ இடையூறுகளுக்கிடையேயும், தொடர்ந்து நல்லாதரவு கொடுத்துக் கொண்டிருப்பதற்கு எங்களது மனமார்ந்த நன்றியினை உங்களது பொற்பாதங்களில் சமர்பிக் கின்றோம்.

தற்சமயம் பத்திரிக்கை அச்சடிப்பதற்கு தேவையான அனைத்துப் பொருட்களும் அதிகளவில் விலை ஏறிவிட்டன. குறிப்பாக தபால் துறையினர் முன்று ரூபாய் ஒட்ட வேண்டிய ஸ்டாம்ப் 24 டிசம்பர் மாதத்தில் இருந்து 8 ரூபாய் ஒட்டவேண்டும் என்று ஏற்றிவிட்டார்கள்.

நமது இதழ் கடந்த ஆறு ஆண்டுகளாகவே பல்வேறு சிரமங்களுக்கிடையே விலை ஏறாமல் பார்த்துக்கொண்டோம். ஆனால் தற்சமயம் நமது இதழுக்குண்டான விலையை ஏற்றவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாயிருக்கின்றோம். பாபா பக்தர்களும், வாசகர்களும் விலை ஏற்றத்தை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளாமல் தொடர்ந்து எங்களுக்கு உங்களது நல்லாதரவை வழங்கும்படி வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கின்றோம்.

அடுத்த மாதத்தில் இருந்து

தனி இதழ்	-	**ரூ. 20/-**
வருட சந்தா	-	**ரூ. 320/-**
3வருட சந்தா	-	**ரூ. 850/-**
5வருட சந்தா	-	**ரூ. 1400/-**
ஆயுள் சந்தா	-	**ரூ. 3000/-**

என்றும் அன்புடன்,

ஆசிரியர்,

"சாயி மகராஜ் குருவை தேடி"

9941816692.

– வே.ஸ்ரீராம்

சாய் சரிதம்-15

கதை வழியில்

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதைபதைப்பு மறைந்து தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

– ஸ்ரீ சீரடி சாய்பாபா

பாபாவின் சொல்லும், அவரது அபாரமான கருணையும் எப்படி குணமாக்கமுடியாத வியாதிகளை குணமாக்கியது என்பதை போன அத்தியாயத்தில் கூறினேன். இப்போது சாயி எங்கும் நிறைந்தவர் என்பதற்கு ஆதாரமான ஒரு கதையை திரு. தாஸ்கணு மகராஜ் அவர்கள் என்னிடம் கூறினார்கள். அதை உங்களிடம் பகிர்ந்து கொள்கின்றேன்.

நைஜாம் சமஸ்தானத்தில் உள்ள நாந்தேட் என்ற ஊரில்,மிகப் பெரிய வியாபாரியான ரத்தன்ஜி என்ற சிங் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு சொந்தமாக நூற்றுக்கணக்கான ஆடுகளும், மாடுகளும், குதிரைகளும், வண்டிகளும், பெருமளவு நிலங்களும், பங்களா போன்ற வீடுகளும் அவருக்கு சொந்தமாக இருந்தன. ஆனாலும் அவர் மிகுந்த மன வருத்தத்தில் வாழ்ந்து வந்தார்.



எல்லா வசதிகளும், வாய்ப்பு களும் பெற்றிருந்த ரத்தன்ஜி ஆண் வாரிசு இல்லாததனால் தனக்கொரு ஆண் வாரிசு வேண்டுமென்று எல்லாவிதமான மருத்துவமும் செய்து கொண்டார். அதுமட்டுமின்றி, பல்வேறு புனிதத் தலங்களுக்கு சென்று புனித நீராடி கடவுள்களிடம் பிரார்த்தனை செய்து, செய்து அழுத்துப் போனார்.

இறுதியாக, தனது நெருங்கிய நண்பரான திரு. தாஸ்கணு மகராஜிடம் தனது வேதனையை பகிர்ந்து கொண்டார். தாஸ்கணு அவரை சீரடிக்குச் சென்று பாபாவின் பாதங்களை நமஸ்கரித்து அவரிடம் ஆண் குழந்தை வேண்டும் என்று வேண்டிக்கொள்ளும்படி ஆலோசனை கூறினார்.

தனது நண்பரின் ஆலோ சனையை ஏற்றுக்கொண்ட ரத்தன்ஜி சீரடிக்குச் செல்ல திட்டமிட்டு அதற்குண்டான ஏற்பாடுகளை செய்ய ஆரம்பித்தார். அப்போது ஒரு நாள் எதார்த்தமாக, நாந்தேட்டில் பிரபலமாக இருந்த ஒரு இஸ்லாமியத் துறவி ஒருவர் அவரது வீட்டிற்கு திடீரென வந்தார்.

வீட்டிற்கு வந்த துற வியை வரவேற்று அவ ருக்கு மரியாதை செலுத்தி விருந்து கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்து அதற் கான ஏற்பாடுகளை செய்யும்படி தனது வேலையாட்களுக்கு உத்தரவிட்டார்.

சில மணி நேரங்களிலேயே ரத்தன்ஜி வீட்டில் துறவிக்கு சிறப்பான வரவேற்பும், விருந்தும் கொடுக்கப்பட்டது.

அதற்குப்பின் சில நாட்களில் ரத்தன்ஜி சீரடிக்குச் சென்று பாபாவின் பாதங்களில் விழுந்து பணிந்தார். பிறகு தான் கொண்டு சென்றிருந்த மாலையை பாபாவிற்கு அணிவித்து, ஒரு கூடை நிறைய மாம்பழங்களை சமர்பித்தார். பாபா அவரை அன்போடு தனதருகில் அமர்த்திக் கொண்டார்.

அதைப்பயன் படுத்திக்கொண்ட ரத்தன்ஜி தனது உள்ளக்கிடங்கை பாபாவிடம் கொட்டி தனக்கொரு ஆண் வாரிசை அருளும்படி கேட்டுக் கொண்டு ரூபாய் ஐந்தை காணிக்கையாக வழங்கினார். பாபா அதை வாங்காமல், இந்த ஐந்து ரூபாயில் ஏற்கனவே நான் உன்னிடம் 3 ரூபாய் 14 பைசாக் களை வாங்கிக் கொண்டேன். எனவே அது போக மீதத்தை தருமாறு கேட்டார்.

ரத்தன்ஜிக்கு ஒன்றும் புரியவில்லை. மிகவும் குழப்பம் அடைந்தார். பாபா என்ன கூறினார் என்பதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. தான் சீரடிக்கு வருவது இதுதான்



முதல்முறை. பிறகு எப்படி நான் ஏற்கனவே பாபாவிற்கு காணிக்கை தந்திருக்க முடியும். அவரால் இந்த குழப்பத்திற்கு விடைகாண முடியவில்லை.

ஆனாலும், பாபா கேட்ட மீதம் உள்ள 1 ரூபாய் 86 பைசாக்களை தட்சணையாக அளித்தார். பாபா மனம் மகிழ்ந்தவராய், அவரின் தலையில் தனது கரத்தினை வைத்து ஆசீர்வதித்து, உனது கஷ்டமான காலங்கள் முடிவுக்கு வந்து விட்டன. அல்லா உனது ஆசைகளை விரைவில் நிறைவேற்று வார் என்று கூறினார்.

பின்னர் சில நாட்கள் சீரடியில் தங்கி பாபாவின் அனுகிரகத்தைப் பெற்றுக்கொண்ட ரத்தன்ஜி பாபாவின் அனுமதியோடு ஊருக்குத் திரும்பினார்.

அதன்பிறகு தாஸ்கணுவை சந்தித்து சீரடியில் நடந்த அனைத் தையும் கூறி எல்லாம் மிகச்சிறப்பாக நடந்தது. ஆனால் ஒன்றும் மட்டும் எனக்கு புரியவே இல்லை.

முன் பின் அறியாத என்னிடம் இருந்து பாபா 3 ரூபாய் 14 காசுகள் எப்படி தட்சிணை வாங்கி யிருக்க முடியும். இக்குறிப்புகள் எதை தெரிவிக்கின்றன என்று எனக்கு விளக்கம் கூறுங்கள் என்று தாஸ்கணுவிடம் கேட்டுக் கொண்டார்.

தாஸ்கணுவும், ரத்தன்ஜி யிடம் பலவாறாக விசாரித்தார். சட்டென்று ஞாபகம் வந்தவராய் சென்ற மாதம் நமது இஸ்லாமிய துறவிக்கு விருந்து கொடுத்து உபசரித்தீர்களே அதற்கு எவ்வளவு செலவாயிற்று என்று கேட்டார். ரத்தன்ஜி உடனடியாக தனது கணக்குப்பிள்ளையை அழைத்து விபரத்தை கூற, அவர் கணக்குப் புத்தகத்தை எடுத்துவந்து குறிப்பிட நாள் கணக்கைப் பார்த்து இஸ்லாமிய துறவிக்கு விருந்து உபசரிப்புக்குண்டான செலவு 3 ரூபாய் 14 காசுகள் என்று படித்துக் கூறினார்.

அதைக்கேட்ட, ரத்தன்ஜியும், தாஸ்கணுவும் ஆச்சர்யத்தால் செயல் இழந்து போயினர். பாபா சீரடியில் வாழ்ந்தாலும், நெடுந்தூரம் நடப்பதையும் அறிந் திருக்கின்றார். அவர் எங்கும் நிறைந்த பேறறிவுடையவர் என்பதில் சந்தேகம் இல்லை என்று முடிவு செய்து கொண்டனர்.

இந்நிகழ்விற்குப்பின் ரத்தன்ஜிக்கு பாபாவின் மேல் நம்பிக்கை பல்கிப் பெருகியது. பாபாவின் மேல் மிகுந்த பக்தி செலுத்தினார். பின்னர் உரிய காலத்தில் பாபாவின் வாக்கினுக்கேற்ப அவருக்கொரு ஆண் குழந்தை பிறந்தது. அவரது மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

பிறகென்ன அவருடைய கடைசி காலம் மகிழ்ச்சியுடன் சென்றது.

தன்னைப் பார்க்க வருபவர் களிடம், பாபா தட்சிணை கேட்கின்றார் என்பது அனைவரும் அறிந்ததே! ஆயினும் ஒரு சிலர், துறவியாய் திரிபவர் ஏன் தட்சிணை கேட்க வேண்டும்?



பணத்தை வாங்கி அவர் என்ன செய்வார். ஏன் அவருக்கு இந்த ஆசை, பணம் சேர்க்கும் ஆசை இருப்பவர் துறவியாக முடியுமா? என்றெல்லாம் நினைத்தனர்.

ஆனால் சாயி, தான தர்மத்தை அடியவர்களுக்கு போதிப்பதற்கும், பணத்தின் மீது அவர்களுக்குள்ள பற்று குறைவதற்கும், அதன் மூலம் அவர்களது மனம் சுத்த மடையும்படி செய்வதற்கும் பாபா அவர்களிடமிருந்து தட்சிணையை கட்டாயமாக கேட்டுப் பெற்றார். அதைவிட மேலாய் தட்சிணை என்பதனை அவர் பணத்திற்குள் மட்டும் வைத்துப் பார்க்கவில்லை என்பதனையும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆரம்பத்தில் சீரடி மக்களிடம் பாபா எதையுமே கேட்டுப் பெற வில்லை. எரிக்கப்பட்டு கீழே போடப்பட்ட தீக்குச்சிகளை மட்டுமே பொறுக்கி தனது பைகளில் வைத்துக்கொண்டார். யாராவது ஒரு பைசாவோ, இரண்டு பைசாவோ கொடுத்தால்

அவர் அதை எண்ணை வாங்கவும், புகையிலை வாங்கவும் பயன்படுத்திக்கொண்டார்.

பிற்பாடு வெளியூர்களில் இருந்து பாபாவை காண வந்த மக்கள், ஞானிகளை வெறுங்கைகளோடு பார்க்க வரக்கூடாது என்பதற்காக, பாபாவின் முன் சில செப்புக் காசுகளை வைக்க ஆரம்பித்தனர். ஒரு பைசாவாக இருந்தால் அதை எடுத்து வைத்துக்கொள்வார். இரண்டு பைசாவாக இருந்தால், அதை கொடுத்தவரிடமே திருப்பிக்கொடுத்துவிடுவார்.


பல ஊர்களில் இருந்து மக்கள் பெருமளவு வரத்தொடங்கிய பின்னர் மக்கள் காணிக்கையாக பெருந்தொகைகளை கொடுக்கத் துவங்கினர். அவர்களை ஒழுங்கு படுத்த வேண்டும் என்பதற்காக அவர்கள் கொடுப்பதற்கு முன்பு பாபாவே தட்சிணையை கேட்க ஆரம்பித்தார்.

ஆனால் அதில் உள்ள விசித்திரத்தைப் பற்றி பிரசித்திப்பெற்ற ஹிந்தி நடிகரான திரு. கணபதிராவ் போடஸ் தனது சுயசரிதையில், பாபா தன்னிடம் திரும்பத்திரும்ப தட்சிணை கேட்டு தனது பையில் இருந்த அனைத்து பணத்தையும் வாங்கிக்கொண்டதாகக் கூறினார். ஆனால் அதன் விளைவாக தனது பிற்கால வாழ்வில் ஒருபோதும் தனக்கு பணத்தேவையே இருக்க வில்லை என்று வியந்து கூறினார்.

முக்கியமாக பாபா தன்னிடம் வந்த பக்தர்களிடம், முதலில் இரண்டு நயா பைசாக்களையே கேட்டார். ஆனால் அதற்கு பணத்தைத்தவிர வேறு மறைபொருள் உண்டு என்பதை அவரே நேரடியாக சிலரிடம் கூறக்கேட்டேன். அதாவது, என் குரு என்னிடம் இரண்டு நயா பைசாக்களை தட்சணையாகக் கேட்டார். நான் அவரிடம் "நம்பிக்கை, பொறுமை" என்ற இரு நயா பைசாக்களை அளித்தேன் என்று கூறுவார்.

ஒரு முறை புவா என்பவரிடம் பாபா பதினோரு ரூபாய் தட்சிணை கொடு என்று கேட்டார். புவா அவர்கள் பாபாவின் மறைபொருளான வாக்கை உணர்ந்து கொண்டவராதலால், நானாவிதமான பக்திகளையும், என் உடல், உயிரையும் சேர்த்து பதினென்றை தங்களுக்கு காணிக்கையாக அளிக்கின்றேன் என்று கூறினார். அதற்கு பாபா, அவை ஏற்கனவே என்னுடையவை. எனக்கு பதினோரு ரூபாய்களை கொடு என்று கேட்டு வாங்கிக் கொண்டார்.

ஒரு முறை காசிராம் தன்னுடைய நண்பர்கள் நால்வரை அழைத்துக் கொண்டு பாபாவின் தரிசனத்திற்கு சென்றார். அப்போது தனது நண்பர்களிடம் யார் தவறு செய்தவர்களோ அவர்களிடம் அவர்களது தவறுகளுக்கேற்ப பாபா தட்சிணை வாங்குவார் என்று கூறிக் கொண்டே வந்தார். நண்பர்கள் அனைவரும் மசூதியில் பாபாவை பணிந்து வணங்கினார்கள். பின்பு காசிராமின் நான்கு நண்பர்களிடமும் பாபா தட்சிணையை கேட்டுப் பெற்றார். காசிராமிடம்



மட்டும் தட்சிணை கேட்கவில்லை.

நண்பர்கள் அனைவரும் பாபாவின் தரிசனத்திற்குப்பின் அவர்களது தங்குமிடத்திற்கு திரும்பினர். உடனே காசிராம் நான் கூறியது சரியாகிவிட்டதா? யார் தவறு செய்திருக்கின்றீர்களோ அவர்களிடம் பாபா தட்சிணை வாங்குவார் என்று கூறினேன் அல்லவா? உங்கள் நால்வரிடமும் பாபா தட்சிணை வாங்கினார் அல்லவா? அப்படியானால் நீங்கள் நால்வரும் தவறு செய்திருக்கிறீர்கள் என்று தானே அர்த்தம் என்று கேலி பேசினார்.

அதே நேரம் அவர்களது வீட்டின் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. காசிராம் சென்று கதவைத் திறந்தார். வெளியே ஒரு சிறுவன் நின்றிருந்தான். அவனிடம் யார் நீ உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார் காசிராம். உடனே அந்த சிறுவன் இங்கு காசிராம் யார் என்று கேட்டான். நான் தான் என்றார் காசிராம். நான் பாபாவிடம் இருந்து வருகின்றேன். பாபா உங்களிடம் பத்து ரூபாய் காணிக்கை வாங்கிவரச் சொன்னார் என்றான் சிறுவன்.

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான சாயி பலநேரங்களில் அறியாமையால் எழும் அகங்காரத்தைக்கூட தட்சிணையாக ஏற்றுக்கொண்டு சிலருக்கு அவர்களின் கர்ம வினையைக் குறைக்கின்றார் என்பதை இதன் மூலம் அறியலாம்.

ஒரு முறை புரபசர் நரகே என்பவரிடம் பாபா 15 ரூபாய் தட்சிணை கேட்டார். நரகே தன்னிடம் ஒரு பைசா கூட இல்லை என்று கூறினார். அதற்கு பாபா, உன்னிடம் பணம் இல்லை என்பதை நான் அறிவேன். நீங்கள் தற்போது படித்துக்கொண்டிருக்கும் யோக வாஸிஷ்டத்தில் இருந்து எனக்கு தட்சிணை கொடுங்கள் என்றார்.

இந்த சந்தர்ப்பத்தில் தட்சிணை என்பது, நூல்களில் இருந்து படித்து அறிந்த நீதிகளை அடுத்தவர்களுக்கு புரியும்படி எடுத்துக்கூறுவது தட்சிணை என்று பொருள்படும்படியாக பாபா தட்சிணை கேட்டார்.

இரண்டாவதாக திருமதி. தர்கட் அவர்களிடம் பாபா ஆறு ரூபாய் தட்சிணை கொடுக்கும்படி கேட்டார். அந்த நேரத்தில் அவளிடம் பணமில்லை. உடனே அவள் பாபாவிற்கு கொடுப்பதற்கு தன்னிடம் பணம் இல்லையே என்று கலங்கினாள்.

மனவருத்தத்துடன் தனது

கணவனிடம் சென்று நடந்ததைக் கூறினாள்.

எல்லாம் அறிந்த பாபா உன்னிடம் பணம் இல்லை என்பதை அறிய மாட்டாரா? ஆகவே அவர் உன்னிடம் தட்சிணையாக பணத்தை கேட்டிருக்க மாட்டார். எனக்குத் தெரிந்த வகையில் அவர் உன்னுடைய ஆறு உட்பகைவர்களான காமம், கோபம், லோபம், அகங்காரம், மடம், மாச்சர்யம், ஆகியவைகளையே தட்சிணையாகக் கேட்டிருப்பார் என்று விளக்கினார்.

தட்சிணையின் மூலம் பாபா ஏராளமான பணத்தை சேர்த்தாலும் அன்று மாலையே தான் தட்சிணையாக சேர்ந்த பணத்தை முழுவதும் தானம் அளித்துவிடுவார் என்பதும், அடுத்த நாள் காலையில் அவர் எப்போதும் போல் பக்கிரியாகவே தனது வாழ்க்கையை தொடங்குவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாபா தனது இறுதி பத்தாண்டுகளில் ஏராளமான பணத்தை தட்சிணையாகப் பெற்றாலும் அவர் மகாசமாதி அடைந்த போது அவரிடம் ஒன்பது நயா பைசாக்களே இருந்தன என்பதும், அதையும் பாபா தனது உயிர் பிரியும் நேரத்தில் லட்சுமிபாய்க்கு தானமளித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது

பாபா, எல்லோரிடமும் தட்சிணை கேட்கவில்லை. சிலர் கேட்காமலே தட்சிணை அளித்தார்கள் அதை சில நேரங்களில் ஏற்றுக்கொண்டார். சில நேரங்களில் வாங்க மறுத்து விடுவார். சில குறிப்பிட்ட அடியவர்களிடமே அவர் தட்சிணை கேட்டார். பாபா தட்சிணை கேட்டால் கொடுக்கலாம் என்ற நினைத்தவர்களிடம் அவர் தட்சிணை கேட்பதே இல்லை.

மேலும் பாபாவின் விருப்பத்திற்குமாறாக யாராவது தட்சிணை கொடுத்தால் பாபா அதை தொடவே மாட்டார். உடனடியாக அதை எடுத்துக்கொள்ளும்படி உரியவர்களிடம் கூறுவார். பக்தர்களின் விருப்பம், பக்தி, சௌகர்யம் இவைகளுக்கேற்றவாறு சிறிய தொகைகளையே அவர் தட்சிணையாகக் கேட்டார். பெண்கள், குழந்தைகளிடம் கேட்டார். அதைத்தவிர தன்னிடம் வந்த எல்லா செல்வந்தர் களிடமும், எல்லா ஏழைகளிடமும் அவர் தட்சிணை கேட்டதில்லை.

தட்சிணை கேட்டு கொடுக்காதவர்களிடம் பாபா ஒருபோதும் கோபம் அடைந்ததே இல்லை. யாராவது சாயிக்கு தட்சிணை கொடுக்க வேண்டும் என நினைத்து பாபாவின் தரிசனத்திற்கு வந்தவர்களிடம் தட்சிணை கொடுத்துவிட்டிருந்தால், தடசிணையை வாங்கிவந்தவர் ஒருவேளை மறந்து விட்டிருந்தால் அவர் அதை அவர்களுக்கு ஞாபகம் மூட்டி அவர்களிடம் இருந்து தட்சிணையை வாங்கிக் கொள்வார்.

சில நேரங்களில் தட்சிணையாக வாங்கிய பணத்தில் சிறிது பணத்தை



தட்சிணை கொடுத்தவருக்கே திருப்பிக் கொடுத்து பத்திரமாக அதை பூஜை அறையில் வைத்து பாதுகாக்கும்படி கூறுவார். அதன்படி செய்த பலர் அவர் களது வருமானம் பலமடங்கு உயர்ந்ததை பாபாவிடம் கூறிப் பெருமைப்படுவதை நானே கண்டிருக்கின்றேன்.

சிலர் தான் கொடுக்க நினைத்ததைவிட அதிகம் கொடுத்துவிட்டால் பாபா அதை திரும்ப கொடுத்துவிடுவார். சிலர் தங்களிடம் பணம் இல்லை என்றால் அடுத்தவர்களிடம் பிச்சை எடுத்துக் கொடு என்பார். ஒரு சிலரிடம் மூன்று நான்கு முறை தட்சிணை கேட்டு வாங்குவார்.

தட்சிணையாக வாங்கிய பணத்தில் இருந்து அவர் தனக்காக கொஞ்சமாகவே செலவளித்தார். மிச்சத்தை பல்வேறு மனிதர்களுக்கு பகிர்ந்தளித்தார். விலை மதிப்புள்ள பொருட்களை யாராவது கொண்டுவந்தால் பாபா கோபம் அடைந்து அவர்களை திட்டுவார்.

ஒரு முறை நானா சாகேப் சாந்தோர்கரிடம் தனது உடமை கள் ஒரு கோவணம், ஒரு துண்டு, ஒரு கஃப்னி, ஒரு தகரக்குவளை அவ்வளவுதான். என்றும் பலர் தேவையற்ற பயனற்ற விலை உயர்ந்த பொருட்களை எல்லாம் கொண்டு வந்து என்னை தொல்லைபடுத்து கின்றனர் என்று கூறினார்.

நமது ஆன்மீக வாழ்க்கையில் இருக்கும் இரண்டு மிகப்பெரிய தடங்கல்கள் பெண்ணும், செல்வ மும் தான். பாபா இவைகளை முற்றிலுமாக ஒழிப்பதற்கு பாபா சீரடியில் இரண்டு அமைப்பை ஏற்படுத்தினார். ஒன்று தட்சிணை, இரண்டாவது, இராதா கிருஷ்ணமாயி.

பக்தர்கள் அவரிடம் வந்த போதெல்லாம் பக்தர்களின் குணநலனுக்கேற்ப ஒன்று அவர்களிடம் தட்சிணை கேட்டார். இல்லை என்றால் பள்ளிக் கூடத்திற்குச் செல் என்று இராதாகிருஷ்ணமாயிடம் அனுப்பினார். பக்தர்கள் இவ்விரண்டு சோதனைகளில் நன்றாக தேறினார்கள் என்றால், அதாவது செல்வத்துக்கும், பெண்ணுக்குமுள்ள பற்றுகளில் இருந்து விடுபட்டார்கள் என்றால் அவர்களின் ஆன்மீக முன்னேற்றம் துரிதமாக இருக்கும் என்பதே சாயி தட்சிணை வாங்கியதற்கும், இராதாகிருஷ்ணமாயியிடம் அனுப் பியதற்கும் உண்டான உண்மையான காரணங்கள் ஆகும்.

தொடரும்

குருவின் இலங்கைப்



திரு. சுந்தர்சாய் அவர்களின் ஏற்பாட்டின் பேரில், குருவின் முதல் வெளிநாட்டுப் பயணம் தொடங்கியது. திரு. சுந்தர்சாய் அவர்களும், குருவும் 22.05.25 வியாழன் அன்று காலை 10.30 க்கு விமானத்தின் மூலம் பயணப்பட்டு மதியம் 1.00 மணிக்கு கொழும்பு சென்றடைந்தனர்.

அங்கு அவர்களை வரவேற்க திரு. இரவி அவர்கள் தயாராய் காத்திருந்தார். அதுவரை கடுமையான வெயில் அடித்துக்கொண்டிருந்தது. குரு அவர்கள் விமான நிலயத்தில் இருந்து வெளியே வந்தவுடன் திடீரென கருமேகங்கள் சூழ்ந்து கொண்டு மழை கொட்டத் தொடங்கியது. சுமார் அரை மணி நேரம் கொட்டித்தீர்த்த மழை சட்டென்று நின்று போனது.



பயணம்



திரு. இரவி அவர்கள், குரு வந்தவுடன் மழையும் வந்து விட்டது. நல்ல சகுணம் என்ற வாறு குருவையும், சுந்தர்சாய் அவர்களையும் வரவேற்று காரில் அழைத்துச் சென்றார். சுமார் ஒரு மணி நேர பயணத்திற்குப்பின் கொழும்பு நகரில் அமைந்திருக்கும் இரவி அவர்களின் இல்லத்திற்குச் சென்றனர்.

திருமதி. தனுஷ்யா ரவி அவர்கள் தங்களது இல்லத்தில் குருவிற்கு பாத பூஜை செய்து ஆரத்தி எடுத்து வரவேற்றார்கள். தொடர்ந்து சிறப்பான மதிய உணவினை அளித்து சிறிது ஓய்வெடுப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். சற்று நேர ஓய்விற்குப் பின் மாலை 5 மணிக்கு கொட்டாஞ்சேனை என்ற இடத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ சாய் நாதன் சரணாலயம் ஆலயத்தில் குரு அவர்கள் சத்சங்கம் மற்றும் தியானம் நிகழ்ச்சியை நடத்தினார்கள்.

அதைத்தொடர்ந்து, 6 மணிக்கு கொழும்பு நியூ செட்டித் தெருவில் அமைந்திருக்கும் சீரடி சாயி சென்டர் ஆப் ஸ்ரீ லங்கா ஆலயத்தின் தலைவர் திரு. எஸ்.என். உதயநாயகம் அவர்களின் அன்பான அழைப்பிற்கிணங்க குரு அவர்கள் ஆலயத்திற்கு சென்றார்கள். தலைவர் அவர்கள், குரு அவர் களையும், சுந்தர்சாய் அவர்களையும் அன்போடு வரவேற்று சாயி தரிசனம் செய்துவைத்து மரியாதை செய்து அனுப்பி வைத்தார்.

நமது குருவை ஆலயத்தின் தலைவரும் ஸ்ரீலங்காவின் ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதியு மான திரு.உதயநாயகம் அவர்களி டம் அறிமுகப்படுத்திய சென்னை அன்பர் திரு. கருணாநிதி அவர் களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்று மாலை 7.00 மணிக்கு



திரு. இரவி அனுஷ்யா அவர்களது இல்லத்தில் ஏற்பாடு செய்திருந்த சத்சங்கம் மற்றும் தியானம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சி முடிந்ததும் வந்திருந்த பக்தர்கள் குருவை தனித்தனியாக சந்தித்து அவர்களது பிரட்சனைக் குண்டான தீர்வையும் ஆசியையும் பெற்றுச் சென்றனர். இரவு பத்து மணிக்கு இரவு உணவிற்குப் பின் ஓயவெடுத்துக் கொண்டார்கள்.

இரவு தங்குவதற்கு இரவி அவர்கள் தனது வீட்டிலேயே வசதியான ஒரு அறை ஒதுக்கித் தந்திருந்தார். மறுநாள் காலையில் தீவிர சாயி பக்தையான திருமதி கிருஷ்ணமலர் அவர்களின் புதல்வி அபர்ணா ருஷாந்தன் திருமணத்திற்கு சென்று கலந்து கொண்டு மணமக்களை ஆசீர்வதித்து திரும்பினர்.

திருமணத்தில் கலந்து கொண்ட பிரபல தொழில் அதிபர் திரு. வீரபாபு அவர்களிடம் திரு. சுந்தர் சாயி அவர்கள் குருவை அறிமுகம் செய்து வைத்தார். உடனே திரு. வீரபாபு அவர்கள் மறுநாள் காலை தனது இல்லத்திற்கு காலை உணவருந்த வரவேண்டும் என்று அன்புக்கட்டளை யிட்டார்.

மாலை 5 மணிக்கு அன்புச் சகோதரி. திருமதி. சரஸ்வதி அவர்களின் இல்லத்தில் சத்சங்கம் மற்றும் தியானம் நிகழ்ந்தது. பிறகு அனைவரும் குருவை தனித்தனியே சந்தித்து ஆசிவாங்கி முடிக்க இரவு 10 ஆகியது 11 மணிக்கு இரவி அவர்களின் இல்லத்திற்கு திரும்பி ஓய்வெடுத்துக் கொண்டோம்.

மறுநாள் திரு. வீரபாபு அவர்களின் இல்லத்திற்குச்

சென்றோம். அவரும் அவரது குடும்பத்தினரும் எங்களை அன்புடன் வரவேற்று எங்களுக்கு காலை உணவளித்து மகிழ்ந்தனர். திரு.வீரபாபு அவர்களின் புதல்வர் திரு.ஈஸ்வரன் அவர்கள் தியான மார்க்கத்திலும், மகான்களிடத்தில் மிகவும் ஈடுபாடு உடையவர். நமது குரு அவர்களிடம் ஆன்மீக விசயங்களைப் பற்றி விரிவாக பேசி ஆனந்தமடைந்தார்.

திரு. வீரபாபு அவர்கள் குருவை அழைத்துச்சென்று தங்களது பூஜை அறையை சுற்றிக்காட்டி குரு அவர்களின் வருகைக்காக மகிழ்ந்து அவருக்கு பரிசுப்பொருட்களையும் தட்சிணையையும் அளித்து மகிழ்ந்தார். பிறகு அவர்களது காரிலேயே வாசல்வரை வந்து அன்புடன் அனுப்பிவைத்தார்.

மதியம் 11 மணியில் இருந்து குருவை சந்திக்க கொழும்பு நகரத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பக்தர்கள் வந்திருந்தனர். அவர்களை தனித்தனியாக சந்தித்த குரு அவர்கள் அவர்களுக் குண்டான செய்திகளைக் கூறி ஆசி வழங்கி அனுப்பி வைத்தார்கள். இடையே மதிய உணவிற்குப் பின் மாலை 4 மணி வரை பக்தர்களின் வருகை தொடர்ந்தது.

அனைவரிடமும் பிரியா விடை பெற்றுக்கொண்டு மாலை 5 மணிக்கு விமான நிலையம் வந்தடைந்தனர். இண்டிகோ விமானம் மூலம் இரவு 10 மணிக்கு சென்னை வந்தடைந்தார்கள். விமான நிலையத்தில் அன்பர்கள் குருவை



வரவேற்க தயாராக இருந்தார். இரவு 11 மணிக்கு திரு.அகஸ்டின், திரு. பரமசிவம், திரு. அய்யாகண்ணு, திரு. பிரதீப் ஆகியோர் குருவிற்கும், திரு. சுந்தர் சாய் அவர்களுக்கும் மரியாதை செய்து வரவேற்று அவர்களது இல்லத்தில் கொண்டு வந்து சேர்த்தனர்.

அனைத்து சாய் உறவுகளும் பயன் பெறும்படி இலங்கைப் பயணத்தை மிகச்சிறப்பாக வடிவ மைத்து ஒரு குறையும் இல்லாமல், எந்த எதிர்பார்ப்பும் இன்றி மூன்று நாட்கள் நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்திக் கொடுத்த திரு. இரவி அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தாருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியினை தெரி வித்துக் கொள்கின்றோம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

பழங்களின் ராஜா மாம்பழம்



முக்கனிகளின் முதன்மையானது மாம்பழம். நமது நாட்டின் தேசியக் கனி சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரையும் உற்சாகமடையச் செய்யும் மாயா ஜாலக் கனியான மாம்பழத்தை, 'மாதா ஊட்டாத சோற்றை மா ஊட்டும்' எனச் சிறப்பித்துக் கூறுவர்.

'மாம்பழத்து வண்டு' எனும் பதம், 'பூவை மட்டுமல்லாமல், பழத்தைத் தேடியும் வண்டுகளை வரவழைக்கும் சாமார்த்தியம் மாங்கனிக்கு உண்டு' என்பதை உணர்த்துகிறது. நாவிலே இனிமையாய்ப் படரும் அதன் சுவைமிக்க சாறு, மன மகிழ்ச்சியை அளிக்கும்.

உலக மக்களுக்கு இந்தியாவால் வழங்கப்பட்ட பெருங்கொடை மாங்கனி. புத்த பிட்சுகளுக்கு அனுமதிக்கப்பட்ட சில உணவு வகைகளுள் மாம்பழமும் ஒன்று. மா ஊறுகாய், மாவடு இல்லாமல் பலரது மதிய உணவு நிறைவு பெறாது எனச் சொல்லலாம்.

வைட்டமின் ஏ குறைபாடுடையவர்கள், மாம்பழத்தைத் தொடர்ந்து சுவைத்து வந்தால்போதும். வைட்டமின் – சி, தாதுப் பொருட்கள் என இருபதுக்கும் மேற்பட்ட ஊட்டங்களைக் கொண்டுள்ளது மாம்பழம். சளி, இருமல் போன்றவை அடிக்கடி தாக்காமல் இருக்க, இதிலிருக்கும் வைட்டமின் – சி உதவியாக இருக்கும். மாம்பழம் கொடுக்கும் பீட்டாகரோட்டீன்கள், பல்வேறு நோய்களிலிருந்து நம்மைப் பாதுகாக்கும்.

கண்களின் ஆரோக்கியத்திற்குத் தேவையான நுண்ணூட்டங்களும் மாம்பழத்தில் உண்டு. இதிலிருக்கும் 'பெக்டின்' இரத்தக் குழாயில் கொழுப்புத் திட்டுக்கள் படிவதைத் தடுக்கும். மாம்பழத்தைத் தொடர்ந்து சாப்பிட்டுவர, சருமம் பொலிவடையும். மாம்பழத்தில் இருக்கும் 'மாங்கிஃபெரின்'எனும் பொருள், வயிறு, குடல் ஆகிய உடற்பாகங்களில் வரக்கூடிய புற்று நோயைத் தடுக்கும் என்கிறது சமீபத்திய ஆய்வு. திசுக்களை ஆரோக்கியமாக வைத்திருந்து முதிர்ந்த வயதிலும் நிமிர்ந்த நன்னடை போட மாம்பழம் துணையாக இருக்கும்.

மாம்பழத்தைத் தொடர்ந்து



சாப்பிட்டுவர ஆண்களுக்கு விந்தணுக்களின் எண்ணிக்கை பெருகும் என்பதை அகத்தியர் பாடல்களின் மூலம் அறிகின்றோம். மனச் சோர்வையும் உடற் சோர்வையும் நீக்கி உற்சாகமாக்கும் என்கிறது தேரன் காப்பியம் என்ற நூல்.

மாங்கனியைக் கடித்துச் சுவைக்க, உமிழ்நீர் அதிகமாகச் சுரந்து, உள்ளுறுப்புகளை வளப் படுத்தும். நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரித்து உடலுக்கு வலிமையைக் கொடுக்கும். மாம்பழத்தில் இருக்கும் நொதிகள், செரிமானத்தைத் தூண்டும் ஆயுதமாக இருக்கின்றன. இதிலிருக்கும் நார்ச்சத்து மலச் சிக்கலுக்குத் தீர்வாகும்.

வேதிக்கற்கள், வேதிப் பொருள்கள் ஆகியவற்றின் துணையோடு பழுக்க வைக்கப்படும் மாம்பழங்கள் செரிமானக் கோளாறுகள், அரிப்பு, வாந்தி, பேதி தொடங்கி, நுரையீரல் பிரச்சனைகள் எனப் பல பாதிப்புகளை உண்டாக்கும் என்பதால் கவனம் தேவை. மாம்பழத்திலிருந்து வெளிவரும் வாசனையை அளவீடாகக் கொண்டு மாம்பழங்களைத் தேர்வு செய்யலாம். மாம்பழங்களின் தோல், பளிங்கு போலப் பளபளக்க வேண்டும் என்று எதிர் பார்க்காதீர்கள். கருநிறக் கோடுகள், திட்டுக்கள் இருக்கும் மாம்பழங் களைத் தாராளமாக வாங்கலாம்.

வேனிற்காலத்தில் தாகத் தைத் தணிக்கவும், நீரிழப்பை ஈடுசெய்யவும் மாம்பழச் சாறு அற்புதமான தேர்வு. பழங்களை நேரடியாக வாங்கி, வீட்டிலேயே பழச்சாறு தயாரித்துக் கொள்ள லாம். பாட்டில்கள் அல்லது அட்டை களில் அடைக்கப்பட்ட பதப் படுத்தப்பட்ட மாம்பழச் சாறைப் பருகுவது நல்லதல்ல.

மாம்பழ ஓட்ஸ் மில்க் ஷேக்: மாம்பழக் கூழ், இரண்டு ஸ்பூன் ஓட்ஸ், ஒரு ஸ்பூன் தேன், பால் 250 மிலி ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து மிக்ஸியில் அடித்துப் பருகிவர, நீங்கள் தேடும் உற்சாகம் நொடிப்பொழுதில் கிடைக்கும்.

மாம்பழபீன்ஸ் கூழ்: ஒரு டம்ப்ளர் மாம்பழச் சாறு, இரண்டு ஸ்பூன் கருப்பு பீன்ஸ், ஒரு ஸ்பூன் மிளகுத் தூள், கால் கப் நறுக்கிய வெங்காயம், கொத்தமல்லி இலைகள், இரண்டு ஸ்பூன் எலுமிச்சை சாறு, கால் ஸ்பூன் சீரகம், சிறிது பூண்டுத் தூள் ஆகிய எல்லாவற்றையும் சேர்த்து அரைத்து, மருத்துவக் குணமிக்க சுவையான பானத்தைத் தயாரித்துக் அருந்தி பயன் பெற லாம்.



வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!



தொடர் - 24

திருவருள் தேடி

நமது சாய் அன்பர்கள் அனைவருக்கும் சுந்தர் சாய் கரம் குவித்து சிரம் தாழ்த்தி வணங்குகிறேன். எங்கும் சாய்! எதிலும் சாய்! எல்லாம் சாய்! எப்பொழுதும் சாய் என நம்மைக் காத்தருளும் குருவருளுக்கும் எனது வணக்கங்கள். குருவின்றி வேறில்லை குறையேதும் எமக்கில்லை.

பாபாவின் திருவருளால் குருசரித்திர பாராயணம் மற்றும் ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் சரிதாமிருதம் பாராயணங்கள் செய்ய ஆரம்பித்ததுடன், இதை நமக்குத் தெரிந்த மற்ற பக்தர்களிடமும் கொண்டு செல்ல வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டது.

ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் சரிதாமிருதம் கிடைத்த உடனேயே ஏழு நாள் பாராயணமாக படிக்க ஆரம்பிக்க நமது சந்தேகங்கள் சிலவற்றிற்கு உடனே அதில் விடை கிடைக்க விறுவிறுப்பாகியது நமது ஆர்வம். இவை உண்மையிலேயே நம்முடன் பேசக் கூடியவை என புரிந்தது.

மேலும் 11 ஸ்ரீ பாதர் புத்தகங்களை வாங்கி நமது சாய் நண்பர்களுக்கு பரிசளிக்க விருப்பம் எழவே அந்த தமிழாக்கப் புத்தகத்தை எழுதிய திரு.சந்தானம் (நெய்வேலி) அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டேன்.

அவருடைய தொடர்பு



சுந்தர் சாய்
9789404451

எனது ஆன்மீகப் பாதையில் பல வாய்ப்புகள், புனித பயணங்கள், சேவைகள், தொடர்புகள் என உருவாக்கித் தந்தது. அதற்கு அவருக்கும் எனது மனமார்ந்த நன்றி கலந்த வணக்கங்களை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். அவரிடம் தொடர்பு கொண்டு பிரதிகள் மேலும் தேவை என விசாரிக்கும் பொழுது திரு. புவனேஷ் ஜோஷி என்பவரது கைப்பேசி எண்ணைக் கொடுத்து அவரிடம் பெற்றுக் கொள்ளுமாறு பணித்தார்.

எங்கள் குடும்ப நண்பரான திரு. ஜோசி அவர்களைத் தொடர்பு கொண்டு மிகவும் மகிழ்ச்சி யுடன் புத்தகங்களை வாங்கி எனது உறவினர்கள் மற்றும் சாய் அன்பர்களுக்கும் கொடுத்து அவர்களையும் பாராயணம் செய்ய வலியுறுத்தினேன்.திரு. ஜோஷி அவர்கள் ஒரு மிகப் பெரிய சேவையாக தந்த குருமார்கள் புத்தகங்கள் பதிப்பு மற்றும் சர்க்குலேஷனை ஒரு ஈடுபாட்டுடன் செய்து வந்தார்.

நான் சென்னை வந்த பிறகு எங்கள் நட்பு மீண்டும் புதுபிக்கப் பட்டு இன்னும் நெருக்கமான ஒன்றாக மலர்ந்தது. வயதில் 20 வருடங்கள் மூத்தவரானாலும் என்னிடம் அன்புடன் பழகினார். அவர் மூலம் சத்சரித, புனிதப் புத்தகங்களை வினியோகம் செய்வதில் ஒரு மிகுந்த மகிழ்ச்சி, குரு தத்த பந்துக்களுடன் தொடர்பு ஏற்பட்டு நமக்கும் ஒரு சேவை செய்ய வாய்ப்பாக அமைந்தது.

பின்னாட்களில் அவருடன் சேர்ந்து ஒரு குழுவாக நாங்கள் கானகாபூர், அக்கல்கோட், குருவபூர், மந்த்ராலயம், பிடாபுரம் என புனிதப் பயணம் செல்ல வாய்ப்பும் கிடைத்தது. நான் ஏழுநாள் பாராயணம் முடித்தவுடன், பிடாபுரம் சென்று ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபரை தரிசனம் செய்ய ஒரு தாகம் உருவானது. கலியுகத்தில் ஸ்ரீ குரு தத்தாத்ரேயரின் முதல் அவதாரமான ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் அவதரித்த இடம் தான் ஆந்திராவில் காகினாடாவிற்கு அருகில் அமைந்துள்ள "பிடாபுரம்" என்ற புண்யஸ்தலம்.

சுமார் 800 வருடங்கள் முன்பு அவதரித்து பல "பால லீலைகள்" புரிந்து 16 வயது வரை தன் பெற்றோருடன் வாழ்ந்து,

பின்பு 14 வருடங்களில் லோக சஞ் சாரம் சென்று முனிவர்களுக்கும், ரிஷிகளுக்கும் கிரியா யோக முறைகளில் புதிய உத்திகளை கற்பித்து, பக்தர்களுக்காக தர்பார் நடத்தி கிருஷ்ணா நதி தீரத்தில் இறங்கி ஒளி ரூபத்தில் மறைந்தவர் ஸ்ரீ பாதர்.

எனது மகன் அர்ஜுனையும் துணைக்கு அழைத்துக் கொண்டு பிடாபுரம் வந்து சேர்ந்தேன். பிப்ரவரி 2015 இல் என ஞாபகம். கங்கை நதிக்கு சமமாக வற்றாத ஜீவ நதியாக கரைபுரண்டோடும் மிகப் பெரிய புண்ணிய நதியான கோதாவரியின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள பிடாபுரம் வந்தடைந்தோம்.

அங்குள்ள "பாத கயா" ஷேத்திரம் எனப்படும் குக்குடேஸ்வரர் கோவில் வளாகத்திலேயே தங்கும் அறை கிடைத்தது. அறையை விட்டு வெளியே வந்தால் 10 அடியில் கோவில் குளம் பாத கயா என்ற ழைக்கப்படும் "தென் புலத்தார் கர்மங்கள்" செய்ய மிக உன்னதமான தெற்கேயுள்ள "கயா" வாகும். அதன் வளாகத்தில் அமைந்துள்ளது குக்குடேஸ்வரர் எனும் சிவஸ்தலம்.

வசிஷ்ட மஹரிஷி வழிபட்ட சிவலிங்கம் மற்றும் சக்தி பீடங்களில் ஒன்றான புரூஹூதி மாதா, தத்த பாதுகா ஆலயம்.

அந்த வளாகத்தில் தரிசனம் முடித்து, ஸ்ரீ பாதர் பிறந்த வீடான அவரது தாத்தாவின் வீட்டிற்குச் சென்று தரிசனம், இரவு நேர ஆரத்தி தரிசனம் முடித்து அறைக்குத் திரும்பினோம். அப்பொழுது ஒரு அற்புதமான அனுபவம் நிகழ்ந்தது.

அன்று திங்கள் கிழமை. அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை, விடியற் காலை ஐந்து மணியளவில் கோவில் குளத்தில் குளியல் முடித்து நம் கையால் சிவலிங்கம், கணபதி, தத்தர் பாதுகை எல்லா மூர்த்தங்களுக்கும் அபிஷேகம் செய்ய ஒரு வாய்ப்பு அங்கே வேலை செய்யும் ஒருவரால் எமக்கு அளிக்கப்பட்டது. மேலும் அம்பாளுடைய சக்தி பீடமான மஹா மேருவுக்கு நம் கையால் குங்கும அர்ச்சனை (லலிதா ஸஹஸ்ரநாமம்) செய்ய வாய்ப்பு, நம்மை மயிர்க்கூச்சரிய வைத்தது.

இவை முடிந்த பின்பே நமக்கு ஸ்ரீ பாத வல்லபர் சமஸ்தானம் செல்ல வாய்ப்பும் தரிசனமும் கிடைத்தது. இந்த அபார கருணையை என்னவென்று சொல்வது?

இத்தகைய நிகழ்வுகள் நமது நம்பிக்கையை பலப்படுத்தி, நமது பக்தியை ஊக்கப்படுத்தி மேன் மேலும் தொடர்ந்து பயணம் செய்ய வழிவகுத்தது எனலாம். இந்த நாட்களில் திருவருள் குருவருளாய் நம்மை வழிநடத்தி மேன்மேலும் பாராயணங்கள் ஆன்மீக பயணங்கள் செய்ய ஊக்குவித்தது.

எனது அனுபவங்களை ஜோஷி அவர்களிடம் பகிர்ந்து கொண்டதன் பலனாக, அவர் என்னை அவரது 9 பேர் கொண்ட குழுவில் ஒருவராக, திரு. நெய்வேலி சந்தானம் அவர்கள் தலைமையில் கானகாபூர் (திரு. நரசிம்ம சரஸ்வதி பாதுகை கோவில்) அஷ்ட தீர்த்தம் எனப்படும் 8 புண்ணிய நதிகள் மற்றும் ஸ்ரீ சுவாமி சமர்த்தர் சமஸ்தானமான அக்கல்கோட், குரவபுரத்திற்கும் பயணம் செய்யும் வாய்ப்பை எனக்களித்தார்.

அத்துடன் மட்டுமின்றி 'பாத கயா' சென்றதன் பலன் உணமை யிலேயே, சிறிதும் திட்டமிடாத கங்கை குளியல், திரிவேணி சங்கமம், காசி, கயா எல்லா புண்ய ஸ்தலங் களுக்கும் செல்ல வாய்ப்பு கிட்டியது. தத்தாத்ரேயரின் பெற்றோர் அத்ரி மஹரிஷி அனுசுயா தேவி தவம் செய்த குகை, ஸ்ரீ ராமபிரான் தர்பார் நடத்திய சித்ர கூடம் என ராமாயணம் நிகழ்ந்த புண்ணிய இடங்களெல்லாம் சென்று தரிசனம் செய்ய வாய்ப்பு கிட்டியது. எனது முன்னோர்களுக்கான 'பித்ருகடன்' செய்து முடிக்கும் வாய்ப்பு கிடைத்து.

நாங்கள் 9 பேர் கொண்ட குழுவில் கிடைத்த அரும்பெரும் நட்பாக திரு. சந்தானம் அவர் களின் வழிகாட்டுதல் மற்றும் ஆன்மீக பயணத்தின் முக்கிய கட்டமாக திருமதி. மஞ்சரி ரமேஷ் அவர்களின் ஆத்மார்த்தமான ஆன்மீக நட்பு இன்றளவும் நமக்கு வரமாக விளங்குகிறது.

திரு. சந்தானம் அவர்கள் மூலமாக பின்னாட்களில் கிடைத்த இலங்கை செல்லும் வாய்ப்பும், மற்றும் அதன்மூலம் உருவான நட்பு வட்டாரம், குரு. ராம் ரத்தன் ஜி அவர்கள் சந்திப்பு, தொடர்புஞ் என பல அனுபவங்கள் மற்றும் மஞ்சரி சாய்ராம் அவர்களின் ஆலயம் நிர்மாணிக்கும் விருப்பம் மற்றும் அதை சார்ந்த நிகழ்வுகள் நமது ஆன்மீக சேவைக்கு ஓர் வடிவம் அமைத்துக் கொடுத்தது.

அந்த நாட்களில் நமக்கு கிடைத்த ஆன்மீக நட்பாய் ஸ்ரீ கஜானன் மஹராஜ் சரிதம் எழுதிய சகோதரி திருமதி. ரமா சுப்பிரமணியன் மற்றும் குருசரித்திரம் மற்றும் ஸ்ரீ மாணிக்கபிரபு திவ்ய சரித்திரம் ஆகியவற்றை தமிழ்மொழியில் அளித்த திரு. வெங்காஜிராவ் அவர்களின் புதல்வர் மதிப்பிற்குரிய திரு. ஸ்ரீ பாதராவ் அவர்களின் நட்பு என மலர்ந்து விரிந்தது.

நமது ஆன்மீகப் பயணத்தில் ஒவ்வொரு காலகட்டங்களிலும் ஒவ்வொரு புதிய நட்புகள் தொடர்புகள் ஏற்பட்டதுடன் அவற்றில் சில அதன் வேலை முடிந்தவுடன் விலகிச் சென்றதும் நம் கவனத்தில் வருகிறது. எனவே எல்லாம் நமது சத்குருவின் விருப்பப்படியே நிகழ்கிறது என்பது உறுதியாகிறது. அவ்வாறு உருவான சில தொடர்புகள் தொடர்ந்து நம் வாழ்வில் சில முன்னேற்றப் பாதைகளில் வழிநடத்துவதையும் இன்றளவில் நம்முடன் பல நாட்களாக தொடர்வதும் நமக்கு மகிழ்வான அனுபவமே.

ஒரு முறை இலங்கை யிலிருந்து நம்மைத் தொடர்பு கொண்டு தமிழில் ஷீரடி சாய் ஆரத்தி புத்தகம் வேண்டும் என்று கேட்டார் சாய் பக்தரும் கொழும்புவில் அமைந்துள்ள சா யிநாதன் சரணாலயம் எனும் பாபா கோவில் நிர்வாக குழுவின் பிரதான உறுப்பினரான திருமதி. டாக்டர். மருதினி எனும் சகோதரி. மராத்தி சொற்களால் அமைக்கப்பட்ட ஷீரடி சாய் ஆரத்திப் பாடல்கள் கடினமாக இருக்கும் பொழுது தமிழர்களுக்கு இன்னும் சவாலாக இருக்குமென்பதில் வியப்பில்லை.

எனவே மறைந்த சாய்

அன்பர் திரு. நாகசாமி எழுதிய தமிழ் மொழி பெயர்ப்பில் ஆரத்தி பாடல் ஒன்றை வாங்கி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அதே சமயம் கொழும்புவில் கொட்டாஞ்சேனை எனுமிடத்தில் அமைந்திருக்கும் திரு. வரதராஜ விநாயகர் ஆலயத்தின் வளாகத்தில் ஷீரடி சாய்பாபா பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதை அறிந்தேன்.

அங்கு டாக்டர். ராம் ரத்தன் ஜி எனும் சாய்பாபாவின் சமகாலத்தில் வாழ்ந்த டாக்டர் பிள்ளை அவர்களின் மறுபிறப்பாய் விளங்கி, புகழ்பெற்ற ஆங்கில மருத்துவராக விஜயவாடாவில் வாழ்ந்தவரால் அகண்ட தீபம் ஏற்றி வைக்கப்பட்டு 49 நாட்கள் ஏழுமுறை சப்தமாக சாய் சரித்திரம் பாராயணம் நடைபெறுவதை அறிந்தேன். அவரை இலங்கை செல்லும் வழியில் சென்னை விமான நிலையத்தில் சந்தித்து அறிமுகம் செய்து கொண்டு ஆசி பெற்றேன்.

மேலும் 100 தமிழ் ஆரத்தி புத்தகங்கள் தேவைப்படவே, திரு. நாகசாமி அவர்களின் கிண்டி வீட்டிற்கு சென்று வாங்கி டாக்டர். மருதினி அவர்களை சென்னையிலுள்ள அவர்கள் பெற்றோரது இல்லத்தில் சந்தித்து கொடுத்தேன். பின்னாட்களில் எனது அன்பு சகோதரியாய் மலர்ந்தது எங்களின் நட்பு. நமது ஷீரடி சாய்நாதரின் கிருபையால் எங்கள் முதல் அறிமுக சந்திப்பிலேயே என்னை இலங்கை கோவில் விழாவிற்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

நானும் அதை பாபாவின் உத்தரவாக ஏற்றுக்கொண்டு இலங்கை சென்று வந்தேன். இதற்கு முன் ஒருமுறை எனது நண்பரின் அழைப்பை ஏற்று அவரது வியாபார நிமித்தமாக சுமார் 10 ஆண்டுகள் முன்பு இலங்கை சென்றிருந்தேன். இம்முறை முழுவதுமாக பாபாவின் அழைப்பாக கொழும்பு சென்று, கோவில் வளாகத்திலேயே தங்கி பாராயணம், ஆரத்தி, ஹோமம் என கோலாகலமாய் அனுபவித்து ஒரு புதிய சாய் அன்பர்களின் வட்டாரத்தில் இணைந்தேன்.

இலங்கை கோவில் விழா முடிந்த வுடன், அடுத்த நாள் நாங்கள் அங்குள்ள சில கோவில்களையும் மற்றும் சில இடங்களையும் பார்க்க லாமென ஒரு ஆலோசனை வந்தது. ஆனால் எனக்கோ, பாபாவின் கோவிலைத் தவிர வேறு எங்கும் செல்ல விருப்பமே இல்லை. இதனால் என்னுடன் வந்திருந்த சாய் அன்பர் கோபித்துக் கொண்டு ஏன் உடன் வரமாட்டேன் என்கிறீர் களென வருத்தம் தெரிவித்து பின் அவர் மட்டும் ஒரு சக்தி பீடத்திற்கு சென்று வருவதற்கான ஏற்பாடுகள் நடந்தது.

அன்று மாலை ஓர் அற்புத செய்தி கிடைத்து அவரும் கொஞ்சம் குழம்பிப் போனார். ஏனென்றால் அவர் மட்டும் திட்டமிட்டபடி சென்றிருந்தால் ஓர் முக்கியமான வாய்ப்பை தவற விட்டிருப்பார். அப்படி ஓர் ஆச்சரியமூட்டும் சந்தோஷமான நாளாய் அமைந்தது இலங்கை வரலாற்றிலேயே! ஆம் அதைப்பற்றி நாம் அடுத்த இதழில் விரிவாக அறியலாம் நண்பர்களே!

குரு வாழ்க! குருவே துணை! ஓம் சாய்ராம்!

தொடரும்

சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தின்
தியான வகுப்புகள்:

யோகி ஸ்ரீராம் பாபாவின் நேரடி பயிற்சி

"மௌனத்தின் மூலம் தவம்"

10 வார வகுப்புகள்

9 வாரம் ஆன்லைன் வகுப்புகள். 10 வது வாரம்
"மௌனத்தின் மூலம் தவம்" ஒரு நாள் பயிற்சி நடைபெறும்
* பயிற்சியாளர்கள் கண்டிப்பாக நேரில் வந்து கலந்து கொள்ள வேண்டும் *

நேரம் – ஞாயிறு காலை 9–10.30 வரை.
(மாதத்தின் முதல் ஞாயிறு தவிர)
மௌன தினத்தன்று
குண்டலினி தீட்சை கொடுக்கப்படும்.
கட்டணம் – ₹ 3500/-



- பிராணாயாமம்,
- யோகாசனங்கள்,
- கிரியா விளக்கங்கள்,
- தியானம்,
- ஆத்மஞானம்,
- குண்டலினி யோகம்.

கலியுகத்தில் அனைத்தும் சுலபமாகக் கிடைக்கும் என்பது பெரியோர்கள் வாக்கு.

குருவும் பயிற்சியும் உங்கள் உள்ளங் கையில் கிடைக்கிறது. தூரமாக இருக்கிறேனே என்று ஏங்க வேண்டாம். உங்களுக்காக ஆன்லைன் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்!

நேரிலும் வந்து பயிற்சி எடுத்துக் கொள்ளலாம்.

மேலும் விபரங்களுக்கு;

திருமதி. மாதங்கி பாலாஜி,

போன்: **9942219947**

குரு வாழ்க! குருவே துணை! ஞான ஒளி திக்கெட்டும் பரவட்டும்!

ஒரு யோகியின் வாழ்க்கை எப்படி இருக்கும்? வாழ்க்கை அனுபவங்கள் எப்படி ஆத்மஞானமாக ஆகும்? ஸ்ரீராம் எப்படி யோகி ஸ்ரீராம் பாபா ஆனார்? ஒரு ஞானி எப்படி சிந்திப்பார், செயல்படுவார்? அதுதான் 'குருவைத் தேடி'. ஞானத்தை தேடுபவர்கள் கண்டிப்பாக படிக்க வேண்டிய நூல்.

– திருமதி. மாதங்கி பாலாஜி,
அவதூத கீதை, ஸ்ரீ பாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம், சாயி சமர்த்தர் நூல் ஆசிரியர்.

அற்புதமான நினைத்து பார்க்க முடியாத நிகழ்வுகள். அனுபவங்கள். எளிமை சுருக்கம் செறிவான விளக்கம். மிகவும் அருமையான ஒரு பொக்கிஷம். மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. அனைவரும் படிக்க வேண்டிய நூல்.


திரு.சந்தானம், நெய்வேலி. ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதம் ஆசிரியர்.

குருவைத்தேடி புத்தகம் படித்து முடித்தேன். என்ன ஒரு பாக்யம் உங்களுக்கு. ரொம்ப சந்தோஷம். உங்கள் புத்தகம் பலருக்கு ஆசீர்வாதம். அது மனித குலத்தின் நம்பிக்கை. என் கோப்பை காலியாக உள்ளது.தயவுசெய்து என்னை ஆசீர்வதியுங்கள்.

திருமதி. கீதா, மயிலாப்பூர்.


தங்கள் புத்தகத்தை மெதுவாகத்தான் படிக்கத் துவங்கினேன்.ஆனால் வைக்க மனமில்லாமல் ஒரே நாளில் முடித்து விட்டேன்.இதைப்படித்த நான் பாக்கியசாலி ஐயா.நெஞ்சைத் தொடும் வரிகள். என்ன ஒரு அனுபவம்.கண்கலங்கி அழுது விட்டேன். இந்த புத்தகத்தை இறுக பற்றிக் கொள்வேன்.

திருமதி. காமாட்சி, சேலம்.



யோகி ஸ்ரீராம் பாபா
அவர்கள் எழுதிய அற்புதமான
ஆன்மீக அனுபவத் தேடல்கள் நிறைந்த
"குருவைத்தேடி"
நூல் தமிழிலும், ஆங்கிலத்திலும்
விற்பனையில் உள்ளது.

"குருவைத்தேடி" புத்தகம்
வாங்குவோறுக்குசகல
தோஷங்களையும் போக்கும்
ரூ.1000 மதிப்புள்ள
"சாயி தாயத்து"
இலவசமாக
அனுப்பிவைக்கப்படும்.



ஆங்கில புத்தகம்
விலை 250/-
(தபால் செலவு உட்பட)

தமிழ் புத்தகம்
விலை 400/-
(தபால் செலவு உட்பட)

SAI DHYANALAYA

G- PAY NO: 9941816692

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள் வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.



குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம்	– ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம்	– ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம்	– ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம்	– ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம்	– ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!


STAR
Personal & Caring
Health Insurance
The Health Insurance Specialist

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA

5 வருடங்கள்
மட்டும்
முதலீடு செய்து
வாழ்நாள் முழுவதும்
உறுதியளிக்கப்பட்ட (Guaranteed)
வருமானம் பெறுங்கள்.
Jeevan Utsav
மேலும் விபரங்களும், முதலீடு செய்யவும் அழைக்கவும்.
G. Gnanamoorthi PH: 8754431069

சித்தர்களின் சீவ சமாதி தரிசனம்

சித்தர்களின் சீவசமாதி தரிசனத்தில் நாம் இம்மாதம் ஓம் காசி சதாசிவ மகான் ஆறுமுகம் சித்தர் சீவசமாதி ஆலயத்தை தரிசனம் செய்து அவரின் வாழ்க்கை வரலாற்று குறிப்புகளை அறிந்து கொள்வோம் வாருங்கள்.



– அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

ஓம் காசி சதாசிவ மகான் ஆறுமுகம் சித்தர்

சுவாமிகள் 111 ஆண்டுகளுக்கு முன்பே சீவசமாதி அடைந்துவிட்ட படியால் அவரது பிறப்பு தாய் தந்தையரைப் பற்றிய விபரங்களை அறிய முடியவில்லை. சுவாமிகள், சென்னை பரங்கிமலையில் வாழ்ந்து அங்கேயே தவமியற்றி ஞானத்தைப் பெற்றார்.



முன்காலத்தில் பிருங்கி முனிவர் தவம் செய்ததால் இம்மலை பிருங்கிமலை எனப் பெயர் பெற்றது. காலமாற்றத்தால் பிருங்கி மலை என்பது மருவி பரங்கி மலை என்று அழைக்கப்பட்டு வருகின்றது. நமது சுவாமிகள் சிறுவயதிலேயே ஆன்மீகத்தில் ஈடுபட்டிருக்கின்றார். இஷ்ட தெய்வமாக முருகப்பெருமானை வழிபட்டு ஞானமடைந்திருக்கின்றார்.

பருவ வயதை எட்டியதும் திருமண வாழ்க்கையில் இணைந்திருக்கின்றார். இல்லறத்தில் இருந்து கொண்டே தனது ஆன்மீகப் பயிற்சிகளையும் விடாது செய்து வந்திருக்கிறார். அதன் பயனாக பல ஆன்மீகப்பெரியோர்களை சந்தித்திருக் கின்றார். பல ஞானிகளும் நமது சுவாமிகளை வந்து சந்தித்திருக்கிறார்கள்.

சுவாமிகள் பல சீடர்களை உருவாக்கி இருக்கின்றார். தன்னை

நாடி வருகின்ற பக்தர்களிடம் எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி, ஆசிகள் வழங்கி அவர்களின் குறைகளைப் போக்குவார். ஒரு முறை புகழ்பெற்ற ஆலயத்தின் அர்ச்சகர் ஒருவர் சுவாமி களை சந்தித்து தனிமையில் பேச வேண்டும் என்று காத்திருந்தார்.

அவரைக் கண்ட நம் சுவாமிகள் என்ன அர்ச்சகரே! என்னிடம் தனிமையில் பேச வேண் டுமா? என்று கேட்டார். அவ்வளவு தான் அர்ச்சகர் வியப்பின் எல்லைக்கே சென்றுவிட்டார். உடனடி யாக சுவாமிகளின் கால்களில் விழுந்து வணங்கி சுவாமிகளே என்னை காப்பாற்றுங்கள் என்று கண்ணீர்விட்டார்.

உடனே சுவாமிகள், என்ன அர்ச்சகரே! கோவில் பொருட்களையும் சிலைகளையும் விற்று உங்கள் குடும்பத்திற்கு செலவு செய்து விட்டீர்கள் போலிருக்கின்றதே! இப்போது கோவில் கருவறையில் நுழைந்தால் கால்கள் இரண்டும் நெருப்பில் இருப்பதுபோல் எரிகிறதா? என்று கேட்கவும், அர்ச்சகர் ஓ வென்று கதறி அழுது என்னை மன்னித்துவிடுங்கள் சுவாமி என்று மன்னிப்பு கேட்டார்.

சுவாமிகள் அர்ச்சகரிடம், நீங்கள் செய்யும் பூஜைகள், அரச்சனைகள், அபிசேகங்கள்



எதுவும் இறைப்பணி இல்லை. அது வெறும் நம்பிக்கை மட்டுமே! நீங்கள் சம்பாதிப்பதற்காக உங்கள் முன்னோர்களால் காட்டப்பட்ட தொழில் யுக்தி. அதை இன்றுவரை மக்களிடம் காட்டி ஏமாற்றுகின்றீர்கள்.

இப்போது நீ சேவை செய்யும் ஆலயம் சாதாரணமான ஆலயம் இல்லை. அது ஒரு சித்தரின் சீவசமாதி ஆகும். அதை நீங்கள் வருமானம் வரும் கோவிலாக மாற்றி வைத்திருக்கின்றீர்கள்.



இனிமேலாவது செய்த தவறுக்கு பரிகாரம் செய்து சித்தரின் கோபத்திற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். நாளையில் இருந்து உங்களது ஆலயத்தில் பொது மக்களுக்கு அன்னதானம் வழங்குங்கள். உங்கள் கால் பிரட்சனை சரியாகும் என்று கூறி அனுப்பி வைத்தார். அர்ச்சகரும் அவ்வாறே செய்ய அவரது கால் பிரட்சனை சரியானது.

சுவாமிகள் தான் சீவசமாதி ஆகப்போகும் நாளை தன் சீடர்களிடம் தெரிவித்தார். சுவாமிகள் கூறியதைப்போலவே 03.5.1914 அன்று தனது 101 வது வயதில் சமாதி அடைந்தார். சுவாமிகளின் சமாதி சென்னை ஓட்டேரி மயானத்தில் அமைக்கப் பட்டு இருக்கின்றது.

அவரது சமாதியை சுற்றி அவரது ஐந்து சீடர்களின் சமாதியும் இருக்கின்றது. சுவாமிகளின் வலதுபுறம் முதலியார் , மற்றும் செட்டியார் என்று அழைக்கப்பட்ட இருவரது சமாதிகளும், இடது புறம் அவரது மனைவி, மகள், மற்றும் பேரனது சமாதிகளும் உள்ளது. சுவாமிகளது குருபூஜை அன்று மற்ற சமாதிகளுக்கும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன.

சீவசமாதி ஆலயம்:

ஓம் காசி சதாசிவ ஆறுமுகம் சித்தர் ஆலயம், பிரிக்ளின் ரோடு, ஓட்டேரி மயான பூமி, புரசைவாக்கம், சென்னை.

பேரூந்து மார்க்கம்:

சென்னை, கிளாம்பாக்கம், கோயம்பேடு, எழும்பூர், சென்ட்ரல் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் புரசைவாக்கத்திற்கு பேரூந்து வசதி உள்ளது. புரசைவாக்கத்திற்கு மிக அருகிலேயே ஓட்டேரி மயானம் உள்ளது.

ஓட்டேரி மயான பூமி சென்னை உள்ள பெரிய மயான பூமிகளில் ஒன்றாகும். கார் ஆட்டோ, இருசக்ர வாகனத்தில் உள்ளே சித்தரின் சமாதி வரை செல்லலாம். மயான பூமி என்ற தயக்கம் வேண்டாம். பல மகான்களின் சமாதி மயானத்திலேயே உள்ளது.

●



“ஆத்மஞான குரு”

சீரடி சாய்பாபாவை பலர் அப்பா என்று அழைப்பதை நீங்கள் கேட்டிருக்கலாம். அப்பா என்று அழைக்கும்போது ஓர் உரிமை ஏற்படுவதாக பலரும் சொல்வது உண்டு. அதாவது பாபாவை அவர்கள் தங்கள் குடும்பத்தில் ஒரு உறுப்பினராக நினைக்கிறார்கள் அதில் தவறில்லை.

ஆனால் சில நேரங்களில் அதிக உரிமை எடுத்துக்கொண்டு சிறிய விசயங்களுக்கு எல்லாம் அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்திக் கொண்டு உறவுகளிடம் கோபிப்பதுபோல் கோபித்துக்கொள்கின்றார்கள். அதை சாயிபாபா ஒருபோதும் விரும்பியதில்லை. ஏனெனில் சாயி தன்னை நாடி வரும் பக்தர்களிடம் ஆத்ம ஞானத்தை புகட்டவே என்பதே உண்மை.

ஆகையால் சீரடி சாய்பாபாவை அதையும் விட உயரமான இடத்தில் ஒவ்வொரு வரும் வைக்க வேண்டும் என்பது மிக முக்கியம் ஆகும். அந்த வகையில் பாபாவை ஆத்மஞானம் தரும் குருவாக ஏற்பதே சாலச்சிறந்தது. ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் குருதான் முதன்மையான இடத்தில் இருக்கிறார். அதனால்தான் நம் முன்னோர்கள் மாதா, பிதா, குரு, தெய்வம் என்று வரிசைப்படுத்தி இருக்கிறார்கள்.

ஒரு தீபத்தில் இருந்துதான் இன்னொரு தீபத்தை ஏற்ற முடியும். அதுபோலதான் குருவிடம் இருந்தே சாதாரண நிலையில் இருப்பவர்கள் குரு அந்தஸ்துக்கு தங்களை உயர்த்திக் கொள்ள முடியும். அதன் பிறகே குரு மூலம் தெய்வீகத்தை எட்ட முடியும்.

எனவே முதலில் பாபாவை குருவாக ஏற்றுக் கொள்ளுங்கள். உலகம் முழுக்க வாழும்

லட்சக்கணக்கான மக்கள் சீரடி சாய்பாபாவை குருவாக ஏற்றுக் கொண்டு தங்களது ஆன்மீக பாதையில் உயர்ந்துள்ளனர்.

சீரடி சாய்பாபாவை குருவாக ஏற்றுக் கொண்ட பிறகு அவரை எப்படி வழிபட வேண்டும், எப்படி அவரது கோட்பாடுகளை கடைபிடிக்க வேண்டும் என்று பலரும் யோசிக்கலாம். இதற்கு ஒரே வழிதான் "சரணாகதி தத்துவமே" அதற்குறிய விடையாகும். உடல், பொருள், ஆவி என அனைத்தையும் குருவுக்கு அர்ப்பணிக்க வேண்டும். அல்லும் பகலும் குருவுக்கு சேவை செய்ய வேண்டும். தனது ஒவ்வொரு அணுவையும் குருவுக்கே சமர்ப்பிக்க வேண்டும்.

குருவிடம் எந்த அளவுக்கு நாம் பக்தியும், நம்பிக்கையும் வைத்திருக் கிறோமோ அந்த அளவுக்கு முக்தியும், யோக சக்திகளும் நமக்கு கிடைக்கும். சீரடி சாய்பாபா இந்த வழியைதான் கையாண்டார். தனது குருவிடம் இப்படிதான் நடந்து கொண்டார். அதன் பிறகு தாமே குருவாக இருந்து தனது ஆத்மஞான அனுபவங்கள் அனைத் தையும் தன் ஒவ்வொரு பக்தருக்கும் கிடைக்கும்படி செய்தார்.

"குருவிடம் பரிபூரண விசுவாசத் துடன் இரு. குருவே தெய்வம் என்று மனதார நம்பு. பார்க்கும் ஒவ்வொன்றையும் குருவாகவே நினைத்துக் கொள். அப்படி இருந் தால்தான் சகல உயிர்களிலும் என்னைக் காண முடியும். என்று சீரடி சாய்பாபா அடிக்கடி சொல்வது உண்டு.

இதன் அடிப்படையில் பார்த்தால் பாபா சற்குரு ஆவார். தன்னை நம்பி வரும் பக்தர்களின் லௌகீக தேவைகள், ஆன்மீக தேடல்கள் இரண்டையும் சற்குரு கவனித்துக் கொள்வார். அதுமட்டுமல்ல நிறைய பேருக்கு தாமாகவே முன்சென்று குருவாக இருந்துள்ளார்.

இதுபற்றி அவர் கூறுகையில், நானே கவர்ந்து இழுக்காமல் என்னை நாடி ஒருவரும் வந்தது இல்லை. பல காரணங்களை வைத்து அவர்களை என்னிடம் இழுத்து விடுகின்றேன். ஒரு சிறுவன் நூலின் நுனியில் பறவையை கட்டி இழுப்பது போல நான் என் பக்தனை இழுத்துக் கொள்கிறேன்.என்று பாபா சொல்வது உண்டு.

அதோடு பாபா விட்டு விடுவது இல்லை. தன்னிடம் இழுக் கப்பட்ட ஒவ்வொரு பக்தனுக்கும் பிரம்மஞானத்தை ஏற்படுத்த பலவகைகளிலும் முயல்வார். இதுபற்றி அவர் கூறுகையில், "என்னிடம் வந்த ஒவ்வொரு பக்தனிடமும் நான் 5 விஷயங்களை எதிர்பார்க்கிறேன். மனம், புத்தி, அகங்காரம், சிந்தனை, தன்னம்பிக்கை ஆகிய ஐந்தையும் தந்து என்னிடம் முழுமையாக சரண் அடைய வேண்டும். இல்லாவிட்டால் பணம், பொருள் என்ற உலகியலில் இருந்து அவனால் மீள முடியாது. அவனால் பிரம்மஞானத்தை அடையவே முடியாது" என்கிறார்.

மேலும், "நமது வாழ்க்கையை சற்குரு விடம் நம்பிக்கையோடு ஒப்படைக்க வேண்டும். அப்படி ஒப்படைத்தால்தான் எப்போதும்

ஆனந்த நிலைக்கு செல்ல முடியும்" என்றும் சீரடி சாய்பாபா அடிக்கடி சொல்வது உண்டு.

இதன் மூலம் குருவின் முக்கியத்துவத்தை உணர்த்தியுள்ளார். ஒரு தடவை அவர் குருவின் முக்கியத்துவம் குறித்து மிக அழகான விளக்கம் ஒன்றை தனது வாழ்வியல் நிகழ்வில் இருந்தே வெளியிட்டார். பாபா சொன்ன அந்த விளக்கம் வருமாறு:

என் குரு எதனுடனும் ஒப்பிட முடியாதவர். நிகரற்றவர். அன்பின் வடிவமானவர். அன்பின் வற்றாத ஊற்றாக அவர் இருந்தார். அவரிடம் நான் 12 ஆண்டுகள் இருந்து சேவை செய்தேன். என் மீது அவர் அளவு கடந்த அன்பை பொழிந்தார். அந்த அன்பின் ஆழத்தை நான் எதைக் கொண்டு அளந்து சொல்ல முடியும்?

எப்போதும் நான் அவர் அருகிலேயே அமர்ந்து இருப்பேன். அவரை பார்த்துக் கொண்டே இருப்பேன். அவரை உற்றுப் பார்ப்பதையே நான் விரும்பினேன். சிறிது நேரம் என் கண் பார்வையில் அவர் இல்லாவிட்டாலும் எனக்குள் ஏதோ ஒரு மாற்றம் வந்து விடும். எனவே என் கண்கள் அவரை பார்த்துக் கொண்டு இருப்பதையே நான் விரும்பினேன்.

அளவிட முடியாத ஆனந்தம் எங்களை நிரப்பி இருக்கும். அத்தகைய சமயங்களில் நான் என் குருவையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டே இருப்பேன். எதன் மீதும் என் கண்களை நான் திருப்ப மாட்டேன். திருப்பவும் முடியாது.

எனது குருவின் அன்பால் இரவுபகலாக என்னையே மறந்து கிடந்து இருக்கிறேன். குருவின் பார்வை அன்பால் நிறைந்தது. என் பசியையும், தாகத்தையும் மறக்க வைத்தது. எனவேதான் என் குருவை மட்டுமே நான் தியானம் செய்தேன்.

குரு தவிர வேறு எந்த சிந்தனையும் எனக்குள் ஏற்பட்டது இல்லை. வேறு எந்த குறிக்கோளும் எனக்கும், என் குருவுக்கும் இடையில் வந்ததே இல்லை. என் ஒரே இலக்கு என் குருநாதர் மட்டுமே. அவரது அன்பை என்னால் விவரிக்கவே இயலாது. அந்த அன்பை தவிர எனக்கு வேறு எதுவும் தேவைப்படவில்லை.

அன்பை மட்டுமே என்னிடம் இருந்து என் குரு எதிர்பார்த்தார். ஒரு நிமிடம் குரு என்னை விட்டு பிரிந்தாலும் நான் கலக்கம் அடைந்து விடுவேன். அவரை பார்த்த பிறகே எனக்குள் ஆனந்தம் பூத்து குலுங்கும். என் குரு பெரும்பாலும் எதுவும் செய்யாதது போல காணப்படுவார். ஆனால் அவரது அன்பு பார்வை என் மீது வந்து வந்து சென்று கொண்டே இருக்கும். அதுதான் என்னை மேம்படுத்தியது.

மற்றபடி என் குரு எனக்கு எந்த மந்திரத்தையும் சொல்லி தரவில்லை. மற்ற குருமார்கள் போல என் காதுக்குள் எதையும் ஓதியதே கிடையாது. அவருடைய நிகரற்ற கருணை ஒன்றினால் மட்டுமே நான் இன்று இந்த நிலைக்கு வந்து இருக்கிறேன். அவருடைய அருள் ஆசிதான்

என்னை ஆத்மஞான வளர்ச்சி அடைய செய்து மேம்படுத்தியது. எனவே எவன் ஒருவன் தன் எண்ணங்கள், குறிக்கோள்கள் ஆகிய அனைத்துக்கும் குரு ஒருவரையே ஒரே லட்சியமாக கொள்வதன் மூலம் மிக உன்னதமான இலக்கை அடைய முடியும்.

என் குரு எனக்கு போதித்த உண்மை இது ஒன்றுதான். இந்த உண்மையை அறிய முடியாமல்



ஒவ்வொருவரும் போராடிக் கொண்டு இருக்கிறார்கள். குருவிடம் முழுமையாக சரண் அடைந்தால் மட்டுமே உன்னதமான இலக்கை எட்டி பிடிக்க முடியும். மற்றபடி இதற்கு நான்கு விதமான சாதனைகளும், ஆறு விதமான சாஸ்த்திரங்களும் தேவையே இல்லை. குருவை பரிபூரணமாக நம்பி இருப்பது ஒன்று மட்டுமே போதுமானது.

ஒரு தடவை சீரடி சாய்பாபா தனது பக்தர்களிடம், "நீங்கள் அனைவரும் குருவை அறிய வேண்டும். இல்லாவிட்டால் எதற்காக சீரடிக்கு வருகிறீர்கள். சாணி பொறுக்கவா வருகிறீர்கள்." என்று கோபத்தோடு கேட்டார். அந்த அளவுக்கு குருவுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதில் பாபா உறுதியாக இருந்தார். எனவே இன்றே சீரடி சாய்பாபாவை குருவாக ஏற்று சரண் அடையுங்கள். அதன் பிறகே சீரடி சாய்பாபா நம்மை காக்க வந்த அவதாரப் புருஷர் என்பதை நீங்கள் முழுமையாக உணர முடியும்.

அப்படி உணரும் போது பாபா நம் இஷ்ட தெய்வம் என்பது புரியும்.இந்த புரிதலுக்கு பாபாவை குருவாக ஏற்று சரண் அடைவது ஒன்றே வழி. அப்படி அடைந்தால் மட்டும் போதுமா? பாபாவிடம் நம்பிக்கை வேண்டும் அல்லவா? பாபாவும் தன்னிடம் வரும் ஒவ்வொரு பக்தருக்கும் நம்பிக்கை, பொறுமை இரண்டும் அவசியம் என்று வலியுறுத்தியிருக்கின்றார். ஆகவே நாம்பிக்கை பொறுமையுடன் ஸ்ரீசாயிநாதனை சரணடையுங்கள். சகல நன்மைகளையும் பெறுங்கள்.

குரு வாழ்க! குருவே துணை!

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் தனது வாட்அப் தளத்தில் தினந்தோறும் ஒரு பொன்மொழியை பதிவிடுவதை வழக்கமாக வைத்திருக்கின்றார். அதை வலைத்தளவாசிகள் தினந்தோறும் வாசித்து மகிழ்கின்றனர். அந்த பொன் மொழிகளை வாசகர்கள் அனைவரும் படித்து மகிழவேண்டும் என்று தேதி வாரியாக தொகுத்து வழங்குகிறேன். வாசகர்கள் படித்து பயன்பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.



யோகி ஸ்ரீராம் பாபாவின்

இனிய மொழிகள்

01.04.25

உன் குரு உனக்கு நம்பிக்கையைத் தவிர வேறொன்றையும் தருவ தில்லை. ஆனால் நீயோ உன்னையே தர வேண்டியிருக்கும்.

02.04.25

அறிந்தவற்றை உன்னிடம் இருந்து விலக்கி, அறியாதவற்றை உனக்குள் புகுத்தி, புதிய உலகினை உனக்குள் காட்டும் குருவின் பணியே இவ்வுலகினில் மிகவும் கடினமான பணியாகும்.

03.04.25

மனம் உலகை அறியும், தியானம் கடவுளை அறியும். மனம் கலைந்து போகும் மேகத்தை தேடும். தியானம் நிலையாய் இருக்கும் வானத்தைத் தேடும்.

04.04.24

எவன் ஒருவன் என்னடா இது வாழ்க்கை என்று அலுத்துக் கொள்கின்றானோ, அப்போதுதான் அவன் வாழ்க்கையை புரிந்து கொள்ள முயற்சிக்கின்றான் என்று அர்த்தம்.

05.04.25

அனைத்தையும் நானே செய்கின்றேன் என்ற எண்ணமே அகந்தையை உருவாக்கும். நாம் இறைவனின் கருவியே அன்றி இறைவன் அல்ல. எவ்வளவிற்கு எவ்வளவு பணிந்து நடக்கிறோமோ அந்தளவிற்கு நன்மையுண்டு.

06.04.25

பக்தி, வைராக்கியம், ஞானம் மூன்றும் ஆன்மீக வளர்ச்சியின் மூன்று பரிணாமங்கள். பக்தி என்பத் தொடக்கப்பள்ளி. அது ஒருவரை ஞானத்திற்கு இட்டுச் செல்லும். ஞானம் என்பதே

தொகுப்பு: ஜெயந்தி ஸ்ரீராம்

உயர்நிலைக்கல்வி. ஞானத்தின் வாயிலாக அனைத்தையும் பிரம்மம் என்று உணர்தலே வைராக்கியம் ஆகும்.

07.04.25

காப்பவரும், அழிப்பவரும் குருவே என்னும் ஒரே உறுதியான நம்பிக்கையும், விசுவாசமும் இருந்தால் போதும். யோக சாதனைகளோ, சாஸ்திரங்களையோ அறியவேண்டிய அவசியமில்லை.

08.04.25

உன்னை வெல்வேன் என்பது உணர்வின் செயல். என்னை வெல்வேன் என்பதே அறிவின் செயல். அறிவே தெய்வம்.

09.04.25

ஏதாவது ஒன்றை பிரிவதற்காக வருத்தப்படாதீர் பிரிவு என்பது அனுபவமாகும். தினந்தோறும் பகலைப் பிரிகின்றோம் இரவில் ஓய்வு எடுப்பதற்காக! இன்பத்தை பிரிகின்றோம், துன்பத்தை ஏற்கின்றோம். உறவுகளைப் பிரிகின்றோம். நமக்காக வாழதற்காக. பிரிவு துன்பம் அல்ல. அனுபவம். அனுபவமே வாழ்க்கை.

10.04.25

உணர்ச்சிவயப்பட்ட அறிவு பந்தங்களை ஏற்படுத்தி நம்மை கட்டிப்போடும். அவ்வித பந்தங்களில் இருந்து விடுபடுவதே பிரம்மம் ஆகும்.

11.04.25

புராணங்களையும், வேதங்களையும், சரி, தவறு என்று வாதம் செய்வதை நிறுத்துங்கள். மரணம் வந்து விட்டது நான் யார் என்பதை அறிய உங்கள் நேரத்தை பயன்படுத்துங்கள்.

12.04.25

சைவன் பெரியவனா? வைஷ்ணவன் பெரியவனா? என்று வாதிட்டுக் கொண்டிருக்காதீர்கள். சைவனுக்கும், வைஷ்ணவனுக்கும் மரணம் பொதுவானதே! மரணம் வருவதற்குள் உண்மையை அறிந்து கொள்ளுங்கள்.

13.04.25

நீ உன்னை கவனியாது உலகை கவனிக்க, கவனிக்க கோபம் வரும். உலகை விட்டுவிட்டு உன்னை கவனி, கோபம் விலகும்.

14.04.25

தேவைகளுக்கு ஏற்ப வாழுங்கள். சமுதாயத்தில் கீழ் நிலையில் வாழ்பவனுக்கும் தேவைகள் நிறைவேறுகின்றன. ஆசைகளுக்கு ஏற்ப வாழாதீர்கள். அரசனுக்கும் ஆசைகள் நிறைவேறுவதில்லை.

15.04.25

நீ அடைய வேண்டிய இலக்கை நோக்கி நம்பிக்கையுடன் செயல்பட்டால் உன்னை நோக்கி கல் வந்தால் என்ன? சொல் வந்தால் என்ன?

16.04.25

பிறருக்கு சேவை செய்வதின் மூலம் நாம் செய்யும் கர்ம யோகம் நம்முடைய உள்ளத்தை

தூய்மை செய்யும். அவ்வளவே. மெய்ஞானம் கிட்டுமா என்றால் கிட்டாது. அதற்கு நான் யார் என்ற விசாரணை அவசியம். விசாரணைக்கு தியானமே வழி! விசாரணைக்குத்தான் தியானமே தவிர கண்டதையும் அடைவதற்கு அல்ல.

17.04.25

வாழ்க்கைப் பயணத்தில் நம்பிக்கை தேவை. ஒரு பலூன் வியாபாரியின் மூலதனம் வெறும் காற்று மட்டுமே என்பதை உணருங்கள்.

18.04.25

வாழ்க்கை என்பது வெறும் உயிரோடு இருத்தல் அன்று. அது பயனுள்ளதாகவும், லட்சியத்துடனும் இருக்க வேண்டும். இலட்சிய மற்று வாழ்தலில் பயனில்லை.

19.04.25

எது ஒன்றும் நமக்குத் தெரியாத நிலையில் தெரியாது என் ஒப்புக் கொள்ளுங்கள். தெனிந்ததைப் போல் காட்டிக்கொண்டு அதன் அறியாமையை மூடி மறைக்க முயன்றால் அது ஆபத்தில் போய் முடியும். குறிப்பாக அது ஆன்மீக சாதகனுக்கு மிகவும் ஆபத்தானது.

20.04.25

பொய் கூறுவத் மிகவும் சிரமமான காரியம். ஒரு பொய்யை மறைக்க பல பொய்கள் பேச வேண்டியிருக்கும். உண்மை அப்படி அல்ல. உண்மை பேசுவது மிகவும் எளிதானது. ஆகையால்தான் நம் முன்னோர்கள் சத்தியத்தையே பேசுங்கள் என்றனர்.

21.04.25

குப்பையை சுத்தம் செய்ய வேண்டும் என்றால் அதை ஆராயக் கூடாது. கூட்டித் தள்ளி விட வேண்டும். அதுபோலவே தன்னை அறியவேண்டிய ஒருவன். தன்னை மறைத்துக்கொண்டிருக்கும் தத்துவங்கள் அனைத்தையும் கூட்டித் தள்ளாது அதை ஆராய்வதில் பயனில்லை

22.04.25

நீ உன் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் பிரட்சனைகள் இன்றி பயணிக்கின்றாய் என்றால் நீ போகும் பாதை சரியானது இல்லை என்று புரிந்துகொள்.

23.04.25

மெய்ஞானம் அடைவதற்கு வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு அனுபவத்தையும் அனுபவிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. மற்றவர்களில் வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்களை விழிப்புணர்வோடு கவனித்தலே போதுமானது.

24.04.25

நீங்கள் இந்த உலகத்தில் என்ன வேலை வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால் முக்கியமாக நீங்கள் செய்ய வேண்டியது உங்கள் மனதை வேலை செய்ய விடாமல் பார்த்துக்கொள்வது. அதுவே வாழ்வியல் எனப்படும்.

25.04.25

தீர்த்தங்களும், தெய்வ உருவங்களும் உபாசகனுடைய சிரத்தை,

விசுவாசம் ஆகியவற்றால் மட்டுமே வீர்யம் பெறுகின்றன.

26.04.25

குரு கடவுளின் கோபத்தில் இருந்து நம்மை காக்கின்றார். ஆனால் குருவினுடைய கோபத்தில் இருந்து நம்மை ஒருவராலும் காக்க இயலாது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

27.04 25

பொறுமையைவிட மேலான தவமுமில்லை. திருப்தியை விட மேலான இன்பமுமில்லை. இரக்கத்தை விட உயர்ந்த அறமுமில்லை. மன்னித்தலை விட ஆற்றல் மிக்க ஆயுதமும் இல்லை.

28.04.25

உடல் காய்ச்சலுக்கு மருத்துவர் தான் மருந்து கொடுக்க முடியும். ஆன்மாவின் காய்ச்சலுக்கு "குரு" மட்டுமே மருந்திட முடியும்.

29.04.25

உங்களின் உடல் மீதிருக்கும் அபிமானம் அகங்காரத்தை தூண்டும். அதுவே அடுத்தவருடன் வாதப் பிரதிவாதங்களை வளர்க்கும். அகங்காரத்தை அழித்து விட்டால் வாதமும் அழிந்து போகும்.

30.04.25

குரு உனக்கு நம்பிக்கையை தவிர வேறு எதையும் தருவதில்லை. ஆனால் நீயோ உன்னையே தரவேண்டியிருக்கும்.

●

கர்மா!



உனது கர்மத்தின் விளைவினில் பிறர் நலனும் அடங்கியிருக்கிறது என்பதை உணர்ந்து கொள். எங்கிருந்தோ ஓர் கர்மம் உன்னைத் தாக்குகின்றது என்றால் அது என்றோ நீ விட்டு சென்றதன் பதிவே என்பதை உணர்ந்து கொள்!

ஒருமுறை உன்னை நீயே விழிப்புடன் திருப்பி பார்த்துக்கொள். கர்மத்தை நீ உருவாக்குகின்றாயா? இல்லை அது உன்னை உருவாக்குகின்றதா? உருவாக்குவது நீயென்றால் அதைக் கட்டுப்படுத்தும் சக்தியும் உன்னிடம் தானே இருக்க வேண்டும்.

ஆம் அது உன்னை நோக்கி வருவதற்கான பாதையை நீயே தான் திறந்து விட்டிருப்பாய். வரும் பாதையை அடைத்து விட்டால் வருவது தானாகவே நின்று விடும். நின்று விட்டது உன்னில் அது உருவாக்கிய கர்மத்தின் தீவிரத்தை அதிகரிக்கும் அல்லது குறைக்கும்.

இரண்டில் ஏதாவது ஒன்று வெளிப்பட்டுத் தான் தீரும். வெளிப்படுவதை மடைமாற்றம் செய்யக் கற்று கொண்டால் உன்னைச் சுற்றி எந்த கர்மத்தின் வினைப்பயனும் நெருங்காமல் இயல்பாகவே தடுத்து நிறுத்தப்பட்டு விடும். நீ மையத்தை நோக்கி நகரத் துவங்கி விடுவாய்.



வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞ்ஞானம்

எந்த ஒரு வேலை செய்தாலும் அதற்கு ஆதாரம் என்று ஒன்று வேண்டும். அதுபோலவே யோகக்கலைக்கு ஆதாரமே இந்த உடல். இந்த உடலை ஆதாரமாக வைத்தே யோக சாதனங்களிலும், தியானத்திலும் ஈடுபடுகின்றோம்.

இப்படி தியானத்தில் ஈடுபடும் நேரத்தில் மட்டுமே ஆதாரமான உடலை மறந்து பரம்பொருளுடன் ஐக்கியமாகும் சமாதி பேரின்பம் என்ற ஆத்ம ஞானத்தை அடைகின்றோம். இதுவே ஞான யோகம் என்றழைக் கபடுகின்றது.

இந்த நிலையில் பிரபஞ்ச வெற்றிடம் ஒன்று உருவாகி நமக்கு தேவை என்ற ஒன்று நீங்கி அந்த பிரபஞ்ச சக்தியாகிய இறைத்தன்மையுடன் ஒடுங்குகின்றோம் அல்லது அந்த இறைத்தன்மையாகவே மாறுகின்றோம் இதுவே அஹம் ப்ரஹ்மாஸ்மி.

இப்படிப்பட்ட பேறுபெற்ற ஞான மார்க்கத்தை அடைந்த ஒரு சாதகன் ஒருபொழுதும் பிறவிப் பெருங்கடலில் சுழலுவதும் இல்லை, துன்பதில் துவண்டு போவதும் இல்லை. அவன் இருமை அல்லாத ஒன்று மட்டுமே எப்பொழுதும் இருப்பதாக உணருகின்றான்.

ஞானம் என்பது உண்மை அறிவு, பரம்பொருள் தத்துவத்தை உணர்தல். இந்த ஞானம் எப்படிக் கிடைக்கும்? யார் கொடுப்பார்கள்? எல்லோருக்கும் பொதுவானதா? எப்படி பயில வேண்டும்? இந்த கேள்விகளுக்கான விடையே நாம் ஆராயப்போகும் பின்வரும்

தொடர் அத்தியாயங்கள்.

ஞானமார்க்கத்தை, அடைய நமக்கு தேவையான தெய்வீக அனுக்கிரஹம் ஆறு, 1. ஞானத்தை பற்றிய தேடல், 2. குருவின் கிருபை, 3. நம்பிக்கை, 4. பொறுமை, 5. விடாமுயற்சி, 6. வைராக்கியம்.

கேள்வியும், தேடலுமே ஞானப் பாதையில் பயணிக்க ஒருவனுக்கு அடிப்படையாக அமைகின்றது. மனிதனின் இயற்கையான குணம் என்னவென்றால் தேவை என்ற ஒன்று வரும்வரையில் அவனது இலக்கானது தெளிவாக தெரிவ தில்லை. அந்த அலைக் கழிக்கும் மனதுக்கு ஆறுதல் என்ற கைப் பிடியே ஸ்ரீ குரு. குருவை அடைந்த அக்கணம் முதல் அவனது பாதையானது நிர்ணயிக்கப்படு கின்றது.

குரு என்பவர் யார்? குரு என்பார் ஆன்மிக வழிகாட்டி, இருள் அடர்ந்த காட்டில் வழிகாட்டும் விளக்கு, முட்கள் நிறைந்த பாதையை சீர்படுத்தி நம்மை இலக்கில் கொண்டு சேர்க்கும் வழிநடத்துனர்.

இதனை திருமூலர் மிக அழகாக பின்வரும் பாடல்வரிகள் மூலம் நமக்கு விளக்குகின்றார்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருஉரு
சிந்தித்தல் தானே

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்" குழப்பான மனதுக்கு தெளிவு எப்போது? ஸ்ரீகுருவின் திருமேனி காணும் அப்போது.



நாராயணன்

"தெளிவு குருவின் திருநாமம் செப்பல்" தெளிவான எண்ணம் வார்தையாக வருவது எப்போது? ஸ்ரீ குருவின் திருநாமம் சொல்லும் அப்போது. "தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்" கற்றவித்தைக்கு தெளிவு எப்போது? ஸ்ரீ குருவிடம் கற்ற வித்தையை முறையாகப் பழகும்போது.

"தெளிவு குருவின் திருஉரு சிந்தித்தல் தானே" அறிவுக்கு தெளிவு எப்போது? ஸ்ரீகுருவின் திருஉருவை சிந்திக்கும் அப்போது (அதாவது அவரிடம் கற்ற வித்தையை மீண்டும் மீண்டும் பயிற்சி செய்யும் போது). இதைத்தான் நம்முன்னோர்கள் "உருப்போட்டால் உறுபடுவான், உருபோடான் உறுபடான்" என்று சொல்லிவைத்தனர். இப்படியாக ஆதிகாலம் தொட்டே குருவின் மூலமே ஒரு ஆன்மிக சாதகனுக்கு ஞான ஒளியானது ஏற்றி வைக்கப் படுகின்றது.

இதற்கு பின்பு தான் முக்கியமான உபகரணங்கள் ஒருவனுக்கு தேவைப் படுகிறது. அதில் முதலாவதாக சொல்லப்படுவது நம்பிக்கை!! குருவை பற்றினால் போதுமா என்றால் இல்லை, நம்பிக்கை வேண்டும் குருவின் மேல், அவர் வார்த்தையின் மேல், அவர் செயல் மேல், காட்டும் பாதையின் மேல்.

இரண்டாவதாக, பொறுமை!! நம்பிக்கையோடு சேர்ந்த பொறுமை மிக முக்கியம். குருவை நம்பிய பின்பாக அவர் காட்டும் பாதையில் செல்ல பொறுமை மிக அவசியமாகிறது. பொறுமையோடு, அவருடைய ஆன்மிக பாதையில் பயணிக்க வேண்டும் அப்பொழுது தான் இலக்கான ஞானயோகத்தை அடையமுடியும்.

மூன்றாவதாக, விடாமுயற்சி!! நம்பிக்கையோடும், பொறுமை யோடும் பயணிக்கும்போது விடாமுயற்சி என்பது அத்யாவசியமாகிறது. பயணிக்கும் பாதையின் இடையில் சறுக்கல், தடைகள், இயலாமை, பயிலும் கலையில் பின்னடைவு ஏற்படலாம். குருவின் துணையோடு விடாமுயற்சி யினால் ஞானமார்க்கத்தை அடையவேண்டும்.

இறுதியாக, வைராக்கியம்!! குருவின் துணைகொண்டு அடைந்த ஞானஒளியை வைராக்கியத்தோடு தொடரவேண்டும். அப்பொழுது நாம் இறுதியான இலக்கான இறைத் தன்மையோடு ஒடுங்குதல் என்ற, தன்னை உணர்தல் என்ற நிலையை அடையலாம்.

அதுவே ஞானயோகம். இது அவ்வளவு எளிதான பாதையா என்றால், இல்லை. அதீத நம்பிக்கை, அபார பொறுமை, மனம் தளராத விடாமுயற்சி மற்றும் உறுதியான வைராக்கியம் மிக மிக அவசியமாகின்றது. குரு என்ற ஆதாரத்தை கொண்டு மேற்சொன்ன அனைத்தும் உடைய ஒருவனே "நிலைபெற்ற ஞானி" என்று அழைக்கப்படுகின்றான்.

இந்த ஞானயோகமானது, சம்சார கடலில் மூழ்கி இருக்கின்ற மனிதர்களை அவர்களது பிறப்பு, இறப்பு என்கின்ற துக்கத்திலிருந்து மீட்டெடுக்கும் அரிய பொக்கிஷ மாகும்.

இந்த உலகத்தில் நிலையானது என்பது மரணம் மட்டுமே. உலகை வந்தடைந்த நாம் அனைவரும் ஒரு நாள் இந்த இடத்தை காலி செய்து கிளம்பவேண்டும் என்பது எழுதப்படாத நியதி. வாழும் காலத்தில் எப்படி மரணத்தை வெல்ல முடியும் அல்லது பயமின்றி எதிர்கொள்ள முடியும்? அதற்கான ஒரே தீர்வு "நான் யார்" என்று உணர்தல் மட்டுமே.

காலம் கடந்துகொண்டே இருக்கின்றது, நேரமானது விரைந்து கொண்டே இருக்கின்றது. "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்ற முதுமொழிக்கு ஏற்ப, காலமும், நேரமும் இருக்கும்போதே தன்னை உணர்ந்து கொள்ளவேண்டும். அதற்கு சாதுக்களின் சங்கமத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும், குருவின் திருவடி நிழலை அடைக்கலம் புகவேண்டும்.

அப்பேற்பட்ட சாதுக்களாகிய குருவின் சத்சங்கத்தில் ஈடுபட்டு அவர்களின் திருவாய் வழியாக



விசாரணையை மேற்கொண்டு அவர்கள் கூறுவதை கேட்டு, அதனையே விடாமல் சிந்தனை செய்து ஞானமார்க்கத்தில் பயணிக்கவேண்டும். குருவினுடைய திருவாய் மொழிகளை மூன்று நிலைகளாகிய விழித்திருத்தல், கனவு, ஆழ்ந்த உறக்கத்திலும் மனனம் செய்து தியானத்தில் நிலைக்க வேண்டும்.

விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் இந்த மூன்று நிலைகளே திரிபுரம் ரகசியம் என்றழைக்கபடுகிறது. ஒவ்வொரு மனிதனும் அன்றாடம் இந்த மூன்று நிலைகளுக்கு உள்ளேயே சுழன்று வருகின்றான், இறுதியில் மூன்றில் ஏதோ ஓர் நிலையில் தான் மரணமும் சம்பவிக்கிறது. இந்த மூன்று நிலை களையும் கடப்பது எப்படி? மனிதனால் இதனை கடந்து மரணமற்ற பெருவாழ்வு வாழமுடியுமா? அந்த ரகசியம் தான் என்ன?

நம்முடைய இந்து புராணங் களில் சிவபெருமானுக்கு "திரிபுரம் எரித்த விரிசடை கடவுள்" என்றொரு பெயர் உண்டு. சற்றே ஆராய்ந்தால் அந்த சிவன் என்று அழைக்கப்படும் இறைத் தன்மையானது இந்த மூன்று நிலைகளையும் கடந்த (எரித்த) நிலையான பரம்பொருள் தத்துவம் என்பது நமக்கு புலப்படும்.

அந்த திரிபுர ரகசியத்தை அடைவதே மெய்ஞ்ஞானம். அதை அடைவதற்கான வழியே ஞானமார்க்கமாகிய தியானம். அந்த ரகசிய பிரம்மமே, நான்காவது நிலையாகிய ஆத்ம சாக்ஷாத்காரம். தன்னைஉணர்ந்த ஆனந்த பேரின்பநிலை.

அப்படியானால் சமாதி என்றால் என்ன? சமாதி என்பது பிரம்மத்தை புரிந்து கொள்வதற் கான பாதை மட்டுமே! ஆனால், பிரம்மம் என்பது இறுதியான இலக்கு, நிலையான உண்மை பரம்பொருள். அந்த உண்மை பரம்பொருளை அடைவது எப்படி? அதற்கு முன்பாக ஆத்மஞானம் பற்றி சற்றே ஆழமாக சிந்திக்கவேண்டும்.

இந்த பூமியில் வாழும் அனை வரும் ஒன்றைத்தான் நிலையாக கேட்கிறார்கள், அது என்ன? நிம்மதியான வாழ்வு. அதற்காக தேடி தேடி அலைகிறார்கள். அது பணம் சம்பாதிப்பதில் கிடைக்கும் என்று நினைத்து சேர்க்கிறார்கள். ஆனால், அந்த இன்பமானது நிலையானதாக இல்லை பணம் சேர்த்தபின்பும் அமைதியின்றி தவிக்கிறார்கள். நிலையான இன்பம் அவற்றில் இல்லையென்று அவர்களுக்கு தெரிவதில்லை

மனிதனுக்கு ஒவ்வொரு செயலிலும் எதிர்பார்ப்பு அதிக மாகிறது. அதனால் ஏமாற்றம்

மட்டுமே மிஞ்சுகிறது. இன்பத் திற்கான அடிப்படை தேவை என்னவென்றால் தெளிந்த விசாலமான அறிவு. அந்த தெளிந்த அறிவு ஒன்றே நமக்கு இன்பம் புறப்பொருட்களில் அல்ல, அது அகத்திலே உள்ளது என்பதை உணர்த்தும்.

முதலில், உடல் வேறு, ஆன்மா வேறு என்று தெரிந்து கொண்டாலேபோதும் இன்ப மான வாழ்க்கை வாழ. எளிய வருக்கும் புரியும் வகையில் சொல்ல வேண்டுமானால் இதுவே ஆத்மஞானம். இந்த ஆத்ம ஞானத் தால் கிடைப்பதே உண்மையான, நிலையான மற்றும் இன்பமான வாழ்க்கை.

கோடானகோடி அண்ட, பேரண்டங்கள் இணைந்த இந்த பிரபஞ்சம் தோன்றுவதற்கு மூலகாரணமாக விளங்குவது என்னவென்று தெரியுமா? அதுவே ஒரு அணுசக்தி, அதனையே பெரும் ஞானிகளும், மகான்களும், சித்தர் களும் பரமாணு என்கிறார்கள்.

பரம்+ அணு என்றால் எல்லை யற்ற காந்த சக்தி என்று அர்த்தம்,

அதுவே இந்த மாபெரும் பிரபஞ்சத்தையே இயக்கிக் கொண்டிருக்கிறது. இந்த பரமாணுவே, பரம்பொருள் தத்துவம் இதுவே ஒவ்வொரு ஜீவராசிகளும் இயங்குவதற்கு காரணமாகின்றது. இதிலிருந்து நாம் அறிவது "இருப்பது ஒன்றே" என்ற உண்மையை மட்டுமே!

தொடரும்.

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.




ஆனந்தம் வாழும் வீடு

"வாழ்க்கையின் மேடு பள்ளங்களால் உங்கள் இதயங்களை மாசு படுத்த இயலாது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்". நீங்கள், கடவுளைப் பற்றி நினைத்திருப்பதில் உங்களது நேரத்தை செலவழிக்கும் போது, கெட்ட வழிகளில் இருந்து நீங்கள் விடுபடுகின்றீர்கள். பிறரைத் தூஷிப்பதற்கோ, அவர்களுக்கு எந்த விதத்திலாவது கெடுதல் புரியவோ உங்களுக்கு தூண்டுதல் இராது.

வாழ்க்கையின் நடக்கும் நிகழ்ச்சிகள் அனைத்தும் இறைவனது நன்கொடைகள் என்று ஏற்றுக்கொண்டு, நீங்கள் அன்பில் வாழ்கின்றபோது உங்களுடைய வீடுகள் உண்மையில் பூமியில் இருக்கும் சுவர்க்கங்களாகும். உங்கள் இதயங்களில் கொப்பளிக்கின்ற மகிழ்ச்சி, வைகுந்தத்தின் அடையாளச் சின்னமாக விளங்கும்.

உங்கள் வேலையில் நீங்கள் வெளிக்காட்டுகின்ற தீவிர ஆர்வமும், கவனமும் சிவபிரானின் இருப்பிடமான கைலாசத்தின் அடையாளச் சின்னமாகும். இந்த மேன்மையான இலட்சியங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இதயங்கள், உண்மையில் தங்கமானவை. வாழ்க்கையின் மேடு பள்ளங்களால் அவற்றை மாசுபடுத்த இயலாது. அவை பாதிக்கப்படாமல் தூய்மையாக இருக்கும்.

தியானமும், சேவையும்!



மதியை அமைதியாக வைத்திருப்பதே ஆன்மிகத்திற்கான ஆதாரத்தகுதி! மதி ஏன் அமைதியாக இல்லை? அது தொடர்ந்து எதையாவது சிந்திக்கிறது! ஒரு செயல் செய்வதற்கு முன் அந்தச் செயலின் பலனை கற்பனை செய்து கொள்கிறது! அந்தச் செயலின் முடிவை எதிர்பார்க்கிறது!

மதி என்றால் மனமும் அறிவும் சேர்ந்தது. நிலாவிற்கும் மதிக்கும் சூட்சும ரீதியாக நிறைய தொடர்பு இருக்கிறது! ஆகவே தான் நிலாவிற்கும் மதி என்று மற்றொரு பெயர்! வளர்பிறை மதியை சிவபெருமான் தலையில் வைத்திருக்கிறார். அறிவை பூரணமாக்குவதே சிவபூரணத்தின் செயல்! பௌர்ணமி, அமாவாசை தினங்களில் மதியாகிய மனம் நிலாவின் அதிர்வலை களை உள்வாங்குகிறது. ஆகவே தான் சிறப்பு ஆன்ம தியானங்களை மகான்கள் முன்மொழிகின்றார்கள்.

பௌர்ணமி தியானம் மிகுந்த பலன் அளிக்கிறது! சாயி பக்தர்கள் தியானம் பழக வேண்டும்! தியானமே தேவையில்லை பரஸ்பர அன்பே போதுமானது என்றால் ஒற்றைச் சிறகை வைத்துக்கொண்டு பறவை பறக்க முடியுமா? சக மனிதர் களோடு சிநேகம் புரிய இயலாமல் தயங்கித் தயங்கி நாம் தோற்றுப் போய்க் கொண்டே இருக்கிறோம்!

மனதளவிலே தான் நமது அன்பு இருக்கிறது. மதி அளவில் தான் பகவான் பாபாவின் கோட்பாடு இருக்கிறது. ஆனால் நமக்கு செயல் அளவில் இல்லை!

நாம் பிறரை ஏமாற்று வதாக நினைத்து நம் மையே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம்.

ஆக மதியை தெளி வடையச் செய்யாமல் ஒருகோடி சாயி சஹஸ்ர நாமம் சொல்லினும், சாயி சத்சரித பாராயணம் செய்தாலும், ஓட்டைப் பானையில் நீர் ஊற்றி பாதுகாப்பது போலத் தான் உங்களது ஆன்மிக ஞானம்.

ஆனால் ஞானியோ எந்த விவகாரத்தின் போதும் கூட மதியை அமைதியாக வைத்திருப்பார். வெளிப்புறச் செயலில் எதைச் செய்யினும் மதியின் அமைதியே முக்கியம்! சேவை என்பது வெளிப்புறத்தில் நீங்கள் காட்டும் அன்பு. தியானம் என்பது உட்புற அன்பின் மலர்ச்சி. உள்ளே அன்பில்லாமல் வெளியே எப்படி அன்பு பிரதிபலிக்கும்.

மூன்றாவது உலகப் போரை




வெளியே தேடிக் கொண்டிருக் கிறோம். அது ஏற்கனவே நம் மனதிற்குள் நிகழ்ந்த வண்ணமாய் இருக்கிறது! அந்த எண்ணப் போர்களை வெற்றிக் கொள்வ தற்கு, மதியை அமைதி அடையச் செய்வதற்கு பகவான் பாபாவின் ஆன்மிகத்தில் தியானமும் சேவை யும் இரண்டு சிறகுகள்! இன்னும் யாருமே உயர ஆரம்பிக்கவே இல்லை! நாம் வெறும் காகிதப் பட்டங்களையே பறக்க விட்டு அவற் றையே காவியங்கள் என கற்பனை செய்து கொண்டிருக்கின்றோம். ●

ஆத்மஞானம்

ஆத்மா தான் எண்ணங்களுக்கு ஆதாரம். அவை பிரபஞ்சத்திலிருந்து எழுகின்றன. ஒவ்வொருவருக்கும் ஞானம் என்பது தரப்பட்டிருக்கிறது. ஆனால், சில அறிவற்றவர்கள் தங்களது புத்தக அறிவை பெரியதாக நினைத்துக் கொள்கின்றனர். அப்படிப்பட்டவர்களை நன்கு படித்தவர்கள் என்று ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆத்மாவைப் பற்றிய ஞானம் இல்லையெனில் மற்ற எல்லா வகை ஞானங்களும் வீண்தான். உதாரணத் துக்கு, நன்கு படித்தவர் ஒருவரை எடுத்துக் கொள்ளுங்கள். அவரை நீங்கள் யார் என கேள்வி கேளுங்கள். நல்ல உயர்ந்த படிப்பு படித்தவராயிருந்தாலும் அவரால் இந்த கேள்விக்கு பதில் சொல்ல முடியாது.



நான் "ராமசாஸ்திரி" என்று அவரது பெயரைத் தான் கூறலாம். இந்தப் பெயர் உடலுக்குக் கொடுக்கப்பட்ட பெயர் தானே தவிர, அது அவரது உண்மையான ஆத்மாவுக்கு அளிக்கப்பட்ட பெயரல்ல. அதே கேள்வியை மீண்டும் நீங்கள் கேட்டீர்களானால், அவர் நான் ஒரு "படித்த பண்டிதன்" என்று கூறலாம். இதுவுங் கூட சரியான பதில் அல்ல. ஏனெனில் அது அவரது உலகியலான கல்வியைப் பற்றிக் கூறுகிறது. தவிர அவரது ஆத்மாவை பற்றிச் சொல்வதில்லை.

உலகியல் கல்வி மூலமாக ஆத்ம ஞானத்தை ஒருபோதும் கற்றுக்கொள்ள முடியாது. மொத்தத்தில் தான் யார் என்ற ஆத்மஞானத்தை கற்காமல் மற்ற அனைத்தையும் கற்று ஒரு பயனும் இல்லை.

பாபாவின் இனிய மொழிகள்


ஓம் சாய்ராம் ஒவ்வொரு மாதமும் புத்தகம் வந்ததும் முதலில் அமுத மொழியை தவறாமல் படிப்பேன். மனதிற்கு நிம்மதியாகவும், ஆறுதலாகவும் இருக்கிறது. எனக்காகவே எழுதப்பட்டதாக நினைக்கிறேன் மேலும் இனிய மொழிகள் மிகவும் அருமை தொகுத்து வழங்கிய ஜெயந்தி ஸ்ரீராம் அவர்களுக்கு நன்றி! எல்லோரும் பயன்பெற பாபாவின் அருள் கிடைக்கட்டும் ஓம் சாய் ராம்.

திரு. வெங்கட்ராமன்,
பெங்களூர்.

குருஜி, யோகி ஸ்ரீராம் பாபாவிற்கு அநேக கோடி நமஸ்காரங்கள். குருவின் சாய்சரிதம் மிக மிக அருமை. படிப்பதற்கு மிக எளிதாக இருக்கின்றது. வெள்ளரி விதையின் மருத்துவத்தை உணர்ந்து வியந்தேன். பெங்களூர் சத்சங்கம் எழுதிய மாதங்கி பாலாஜிக்கு எனது மனமார்ந்த நன்றிகள். குரு வாழ்க! குருவே துணை!

திருமதி. இந்துமதி,
அயனாவரம்.

வணக்கம் சாய்ராம். இம்மாத புத்தகத்தில் அமுத மொழி மிகவும் அருமையாக இருந்தது. சாய்பாபாவின் சத்சரித்திரம் விரும்பிப்படிக்கின்றேன். அவரின் வாக்கும், லீலைகளும் படிக்கப்படிக்க மிகவும் அருமையாக இருந்தது. படிக்கும் பொழுது நானும் அக்காலத்தில் பாபாவின் அருகில் இருப்பது போலே உணர்ந்தேன். மற்றும் திருமதி மாதங்கி பாலாஜி அவர்கள் எழுதிய பெங்களூர் சத்சங்கம் கட்டுரை நாங்கள் குருவின் சத்சங்கத்தில் கலந்து கொள்ளாத குறையைப் போக்கியது. மிக்க நன்றி! குருவே துணை குருவே சரணம்.



திருமதி. தனம் அகஸ்டின்,
குன்றத்தூர்.

பேரின்பம், என்னுடையது, இரண்டு பெட்டிச் செய்திகள் வழக்கம்போல் மிக அருமை. வாழ்வியல் நெறி காட்டும்

மெய்ஞானம் புதிய தொடரை படிக்க ஆர்வமாக இருக்கின்றேன். வாழ்த்துக்கள்.

திரு. மகேந்திரன்,
அம்பத்தூர்.

ஆசிரியரின் குருவைத்தேடி ஓர் அற்புதப் படைப்பு என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. நானும் இந்நூலைப் படித்தேன். நான் குருவைத்தேடுகின்றேனா இல்லையோ, வாழ்க்கையில் எதையாவது ஒன்றை தேடவேண்டும் என்ற ஊக்கத்தை இந்த நூல் கொடுத்தது. இக்காலத்து இளைஞர்கள் அனைவரும் படித்து பயன்பெற வேண்டிய அற்புத நூல்.

திரு. கதிரவன்,
நாகர்கோவில்.

ஸ்ரீராம் பாபாவின் இனிய மொழிகள் மனதிற்கு இதமாக இருக்கின்றது. "நிகழ்வதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். ஒரு போதும் நிகழ்வை உருவாக் காதீர்கள்" எனக்கு மிகவும் பிடித்த பொன் மொழி. மிக்க நன்றி சாய்ராம்.

திருமதி. மோகனப்பிரியா சந்திரன்,
தஞ்சாவூர்.

தங்களின் இதழில் வெளிவரும் அட்டைப்படங்கள் மிகவும் அருமை சாய்ராம். இதுவரை 82 அட்டைப்படங்களில் வெளிவந்த பாபாவின் படங்களை நான் சேகரித்து வைத்துள்ளேன். அமுதமொழி எனக்கு மிகவும் பிடித்த பகுதி. இப்போது இனிய மொழியும் மனதை கவர்கின்றது.

தொடரட்டும் உங்களது மகத்தான பணி.

திரு. சிவராம தேசிகர்.
விழுப்புரம்.

பெங்களூர் சத்சங்கம் மிகவும் அருமை திருமதி. மாதங்கி பாலாஜி அவர்களுக்கு மிக்க நன்றி. இதுபோல் ஒரு குருவை நானும் அடைய வேண்டும் என்று பாபாவை பிரார்த்திக்கின்றேன்.

திரு. கமலா தியாகராஜன்,
பரமகுடி.

எப்போதும்போல் அனைத்து கட்டுரைகளும் மிகவும் நன்றாக இருந்தது. ஆனால் ஒரு குறை முன்பு போல் பாபாவின் கதைகள் அதிகம் இடம் பெறுவதில்லையே. பாபாவின் கதைகளை மாதம் ஒன்றாவது வெளியிடுங்கள். சாய்சரிதம் தொடர் படிப்பதற்கு சரளமாக இருக்கின்றது. நன்றி!

திரு காயத்திரி வேங்கடராமன்,
மதுரை

வாசகர்கள் தங்களது மேலான கருத்துக்களை " வாசகர் குரலில்" பதிவிட, கீழ்கண்ட வாட்ஸ் அப் நம்பருக்கு எழுதி அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. பாலகிருஷ்ணன், அண்ணாநகர். ரூ.3000.

திரு. எல்.காமராஜ். மஞ்சு அசோசியேட், சென்னை. ரூ.3000.

திருமதி. ஹேமாவதி நமச்சிவாயம், சாலிகிராமம். ரூ.2000.

திரு. உமா மகேஸ்வரி, அயனாவரம். ரூ.2000.

திருமதி.ராதா கணபதி,வேளச்சேரி. ரூ.1000.

திரு.அகஸ்டின். குன்றத்தூர். ரூ.1500.

ஸ்ரீ சாய் மகராஜ், சென்னை. ரூ.1000.

திருமதி. திருமலைச்செல்வி, கொளத்தூர். ரூ.1000.

திரு.லலிதா லதா, துரைப்பாக்கம். ரூ.1000.

திரு.பாபா மாஸ்டர், பாண்டிச்சேரி.ரூ.500.

திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.

திருமதி.மகாலட்சுமி முருகன். மதுரை. ரூ.500.

திரு. சாய்கிருபா, வாடிப்பட்டி, ரூ. 500.

திரு. சாய்குமார். அயனாவரம். ரூ.500.

திரு. பாபு லதா, வேப்பம்பட்டு, ரூ.500.

திருமதி.சாய் ஜோதி, நாமக்கல். ரூ.500.

திரு. நாராயணன், துரைப்பாக்கம். ரூ.501.

திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.

திருமதி. உமா விஜய் ஆனந்த், அயனாவரம். ரூ.200.

திரு. நிர்மலா, மனேஜர்,சி.சி பேங்க், பெரியார் நகர்.ரூ.200.

திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.

திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.

திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.

திரு. கோபால் சாய், விருகம்பாக்கம்.ரூ.100.

திரு. தினேஷ்குமார், வேளச்சேரி.ரூ.100.

திரு.மல்லிகேஸ்வரன். அயனாவரம். ரூ.100.

திரு. ராதாகிருஷ்ணன், சென்னை. ரூ.101.

திருமதி. திலகா ஷ்யாம்சுந்தர், முகலிவாக்கம். ரூ.101.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 320 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 850 (தபால் செலவு உள்பட)
* 5 வருச சந்தா – ரூ.1,400 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு.3,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர் 99418 16692, 88258 31068
'சாயி மகராஜ் குருவை தேடி',
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,
அயனாவரம், சென்னை – 600023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு. சாய்கிருபா, வாடிப்பட்டி.ரூ.500.
திரு.கதிரேசன், நாமக்கல், ரூ. 400.
திரு. ஜெயலட்சுமி தேவகுமார். பெரவள்ளூர். ரூ.200.
திரு.வேணுகோபால், நங்கநல்லூர்.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன், நங்கநல்லூர் ரூ.100.
திரு. கோபால் சாய்,விருகம்பாக்கம். ரூ.100.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.



எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068